833

ஸர்வஜித் ஸூ மார்கழி மீ

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 12

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

DEC 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

ப்ரசுரிக்குமிடம்:
நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

December 1947
Vol. 6 No. 12

பார்த்திவ ௵ }
தை—மாசி ௴ }

{ஸம்புடம் - 5
{ஸஞ்சிகை - 2

14 FEB 1946
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

400

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்குமிடம்:
நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

{ February, 1946
{ Vol. 5, No. 2

3L
Q22 ...
N46.5.2
189218

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	265
2.	நமது கடமை	270
3.	மதுராலாபம்	272
4.	மார்கழி (தநுர்) மீ பஞ்சாங்க ஸங்க்ரஹம்	274
5.	ஸதாசார்ய ஸூக்தி ஸௌஹார்த்தம்	275
6.	தை (மகர) மீ பஞ்சாங்க சங்க்ரஹம்	281
7.	செய்திகள்	282
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	286
9.	ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரம்	

———::———

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஶ்ரீ:

ஶ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஶ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 6	ஸர்வஜித் ௵ மார்கழி ீ	ஸஞ்சிகை 12

“அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதானம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥”

ஶ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஶ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஶ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஶ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஶ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஶ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஶ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::O::

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

வ்யவஸாயன்:—

"ஸௌவர்ணீய ஸஜராமரமாயிராஜ்யம்
த்ரையம்பகம் ஸஹஹிமாம்ஸுவரமுத்தமாங்கம் ச ।
ஔதந்வதம் ப்ரியதரம் ஸ்வக்ருஹம் யதேதத்
ஸ்வாதார ஏஷ கமடோ ப்ரியதா த்ரிதஸ: ॥"

பாற்கடல் கடைந்த இக்கூர்மாவதாரத்தை ஸேவிக்கவேணும். லக்ஷ்மீ கடாக்ஷத்தை இழந்ததால், இழந்த த்ரைலோக்ய ராஜ்ய ஸம்பத் இந்த்ரனுக்குத் திரும்பவும் தேவி அவதரித்து, அவள் கடாக்ஷ லாபத்தால் அஜராமரமர்க அநந்தோதயமாயிற்று. த்ரிணேத்ரருடைய உத்தமாங்கமான திருமுடி பிறை சூடிற்று. ஸமுத்ர சாயியான தனக்குப் பாற்கடல் முன்னிலும் இனிய ஸ்வக்ருஹமாயிற்று. இப்படி, இந்த்ரனுக்கும் ஈச்வரனுக்கும் தனக்கும் நன்மைகள் புரிந்த இக் கூர்ம ரூபர் மந்தர கிரியைத் தாங்கினவர். இவருக்கு மட்டும் வேறு ஆதாரம் கிடையாது. தன்னையே தாங்கும் ஸ்வாதார ஆமை இவர். இக் கூர்ம விஷயத்தில் இதை எழுதிய சில்பியே, அச் சித்ரத்தின் மேலே சில அக்ஷராமளியை (ச்லோகத்தை)யும் எழுதிவைத்திருக்கிறார். அவற்றைப் பார்க்கவேணும்.

"அவ்யாஸுர்ப்புவநத்ரயீமநிப்ருதம் கண்டூயநைரத்ரிணா
நித்ராணஸ்ய பரஸ்ய கூர்மவபுஷோ நிச்வாஸவாதோர்மய: ।
யத்விக்ஷேபண ஸம்ஸ்க்ருதோததிபய: ப்ரேங்கோலபர்யங்கிகா
நித்யாரோஹண நிர்வ்ருதோ விஹரதே தேவ: ஸஹைவ ச்ரியா ॥"

இது தசாவதார ஸ்தோத்ர ச்லோகம். இதை அமைத்த சில்பி ஸ்வாமி. மனோ மண்டபத்தில் இங்கே இந்தச் சித்ரத்தை எழுதி, இதை நாடக பாத்ரங்கள் மூலமாக வர்ணிப்பதும் ஸ்வாமியாகிய சில்பியே. இந்த நாடக பாத்ரமாகிய ஸம்ஸ்கார சில்பி, பகவான் தனக்குள் அநுப்ரவேசித்துத் தானே எழுதி வைத்தானென்று கூறியதுபோல, தசாவதார ஸ்தோத்ர முடிவிலும்,

"விசித்ரார்த்த ஸூக்தி வேதாந்த தேசிக கவேர் ஜாதம் ஜகந்மங்களம்
தேவேசஸ்ய தசாவதார விஷயம் ஸ்தோத்ரம்"

189241

என்பதால், வித்யைக் கடலாகிற வேங்கடேச்வர கவியினிடம், இந்த ஜகந் மங்களமான தசாவதார ஸ்தோத்ரம் அவதரித்தது என்று காட்டினர். ஸமுத்ரத்தில் அவதாரங்கள் அவதரித்தது போல, வித்யா ஸமுத்ரமாகிய தம்முள் இந்த ஸ்தோத்ரம் தானாகவே கேவலம் பகவத் க்ருபையால் பிறந்தது (ஜாதம்) என்று கூறுகிறார். சித்ரங்களைச் சுவர்களில் எழுதினால், அக் காலங்களில் அந்தச் சித்ரங்களின் மேலே அதைப் பற்றின ச்லோகங்களும் எழுதிவைக்கிற வழக்கம் இருந்து வந்தது போலும்.

'ஹுவநத்ரயீ' என்ற மூன்று லோகங்களையும் (லோக த்ரயியைக்) கூர்மப் பெருமாளுடைய தூக்கக் குறட்டை (மூச்சுக் காற்றுகள்) அவநம் (ப்ராணநம், ரக்ஷணம்) செய்யவேணும். ['சுவ ஹூாணநெ'] கூர்மருடைய மூச்சுக் காற்றுகள், உலகம் மூச்சோடிருக்க அருள்புரியவேணும்; மூச்சுக் கொடுத்து ரக்ஷிக்கவேணும். உலக த்ரயீயை ரக்ஷிக்கவேணு மென்பதால்- முன்பு மத்ஸயாவதாரத்தால் மூன்று வேதங்களான மற்றோர் த்ரயீ ரக்ஷிக்கப் பட்டதென்று வ்யஞ்ஜநம் செய்கிறார்.

சுமிஹரதம் கணூயமெநஜிணா-ஓயாமல் ஆமை முதுகோட்டின் பேரில் மந்தரமலையை மத்தாக நாட்டி, அதைச் சுழற்றிக் கடைகிறார்கள். மலை அதிவேகமாக முதுகின்மேல் உறைந்துகொண்டு ஓயாமல் சுழல்கிறது. இது இந்த ப்ரஹ்ம ஆமைக்குத் தின வடங்கச் சொறிந்து கொடுப்பதுபோல் இருக்கிறது. * மலை சொறிந்து கொடுப்பதால், அந்த ஸுகத்தில் இவ்வாமைக்குத் தூக்கம் வருகிறது.

மேலே மலை சுழன்றாலும் இவரது நித்ரை பையத் துயில். 'கணூயமெநஜிணாநிஉாணஹூ'- என்பதால் மேலே மலை சுழல்வது ஹிதமாயிருப்பதால் தான் இவர் தூங்குகின்றாரென்று ரஸம்.

" ஸுபாஸுமெ ஜெடிஹஉஜவீயஉ வெயிதம்
வரிஹஉஜம் மிரிஶம் மவரஷதஃ।
ஸிஹதயாவஜஉநஶாஜிகஹூவொ
ஶெடெநஜுகணூய நஶவூஶெயஃ ॥ "

" பாட்டுக்கு முத்தமிழ் வில்லிபுத்தூர் வரும் பாவைகுழற்
சூட்டுக்கு நல்லவர் தென்னரங்கேசர் தொடுகடல்வாய்
மோட்டுக் கமடத் திருவுருவாகி முதுமுதுகிற்
கோட்டுச் சயில முழுவதென்னைத் துயில் கொண்டனரே."

.—[திருவரங்கத்துமாலை—23]

[இதன் பொருள் :- இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் வழங்குகின்ற ஸ்ரீ வில்லி புத்தூரில் ஸ்ரீ பெரியாழ்வார் திருமகளாரான ஆண்டாளுடைய தமிழ்ப் பாட்டுக்கும் அவளது குழற் சூட்டுக்கும் உகந்தருளிய ஸ்ரீரங்கநாதன், திருப்பாற்கடல் கடைகையில் உயர்ந்த சிறந்த ஆமை வடிவமாகி, வலிய தனது முதுகிலே சிகரங்களையுடைய மந்தர பர்வதம் தினவு சொறிவது என்றெண்ணி யோகநித்ரை கொண்டருளினர்.]

என்னும் ஸ்ரீ பிள்ளைப் பெருமாளையங்கார் பாசுரம் இங்கு அநுஸந்தேயம். [உழுதல்- பூமியைக் கீறுதல். இங்கே லக்ஷணையாய், தினவு சொறிதலைக் குறித்தது. கலப்பை கொண்டு உழுதலால் பூமி வருந்தாதவாறுபோல, மேலே மலை சுற்றுதலால் கூர்மப்பிரான் வருந்தா திருந்தான் என்பது 'உழுவது' என்னும் சொல்லாற்றலால் விளங்கும்.]

17 DEC 1947 MADRAS

என்ற சுகர் வர்ணந ச்லோகத்தை ‘ சுஜூ-ஒபெநெ:’ என்பதால் ஸூசிக்கிருர். மலையைத் தாங்கிக் கொண்டு தூங்கும் ஆமை ரூபம் ஒன்று.

“ உவயஊரெடி ௦ ஙிரிஙாகூவா நூ:
ஞுக உ ஹஷெந ஸஹஸவாஹ-:॥ ”

என்றபடி மேலே ஒரு பச்சைமாமலையாய், ஆயிரம் கைகளுடன் தேவர்களுக்கு உகவியாக மலையைச் சுழற்றிவிட்டுக் கடையும் ரூப மொன்று. மத்ஸ்யாவதாரத்தில் போல இங்கும் ப்ரஹ்மத்துக் கேற்ற அத்புத ப்ருஹத் ரூபம். அவதாரத்திலும் ‘சுஜஹஸ்ஸஹாவம்’ என்றபடி ப்ருஹத்வத்தையும் காட்டுகிருரென்று ரஸம். ‘வரஸூகூஉவவ-ஷ:’. அதீந்த்ரிய பரப்ரஹ்மமே ப்ரஹ்மமான ஆமை ரூபத்தைத் தரித்தது. ‘யஸூிஸுவிதம் வெஜா:’— வேதங்கள் ப்ருஹ்ம மெனும் மா பூதத்தின் நிச்வாஸம். இக்கூர்மப் பெருமாளுடைய மூச்சுக் காற்றுகள் பாற்கடலில் பெருங்காற்ருக அலைத்து வீசுகிறது. ஸமுத்ரம் வேகமாய்ப் புரள்கிறது. இம்மூச்சுக் காற்றுகள் வேதமயமா யிருப்பதால், ப்ராக்ருதமான கடலை ஸம்ஸ்க்ருத மாக்கிற்று என்ற ரஸத்தை ‘ஸஂஸூரதொஉயிவய:’ என்பதால் வ்யஞ்ஜநம் செய்யும் நைபுண்யம் ரஸிக்கத்தக்கது. ‘நிஸூஸவாதொரிஉ’ விசேஷத்தால் பாற்கடல் ஸம்ஸ்க்ருத மாயிற்று. ஸர்வ வித்யா மயியா ஸ பிராட்டி இப்பொழுது ஆவிர்ப்பவிக்க யோக்யமாம்படி அக்கடல் வேத மயமாக ஸமஸ்க்ருத மாயிற்று. மத்ஸ்யப் பெருமாள் கண்கள், வேதக் கண்களைத் தேடிப் பிடித்து மீட்டன. கூர்மப் பெருமாள் நிச்வாஸங்கள் வேதமயம். வராஹப் பெருமாள் திருமேனி ஸர்வ யஜ்ஞமயம்; ஸர்வ வேதமயம். மலை சுற்றும் வேகச் சுழற் காற்றிலும் மிக்க வேகமா யிருக்கிறது கூர்மத்தின் மூச்சுக் காற்று வேகம். மத்ஸயப் பெருமாளுடையது டோலோத்ஸவ ஸேவை. கூர்மப் பெருமாளுடையது மஞ்ச ஸேவை; மஞ்சத்திலும் ஊசலாடிக் கொண்டேயிருக்கும் மஞ்சம். [‘வொஂவொஉவயஂகிகா’—] அசைந்தாடிக் கொண்டிருக்கும் மஞ்சம். கட்டில்மேல் பாலேயான சுத்த வெள்ளை விரிப்பு. வெண் கட்டில்; வெண் குழந்தை. பாற்கடலின் அலைகளே உந்நதமாக எதிரெதிர் வரிசையாக எழும்பி உயர்ந்த பர்யங்க மாகின்றன. அலைகளின் தொடர்ச்சியால் பர்யங்கத்திற்கு விச்சேத மில்லை. ஆனல் அலைத்து வீசியாடிக்கொண்டிருக்கும் பர்யங்கம். பாற்கடலில் ஸாதாரண காலத்தில் இப்படி மஞ்சம் இராது; ஶேஷ ஶயநம் ஆடாது; ப்ரக்ருஷ்ட பலமானது. இப்பர்யங்கத்தில் ஸ்ரீதேவிக்கும் பெருமாளுக்கும் நித்யமே ஆரோஹ மிருப்பதில் ருசி.

ஸஹைவ ஸ்ரீயா—இந்த மந்தநாவஸரத்தில் ஸ்ரீதேவியின் ஆவிர்ப்பாவம். இந்த அவஸரத்தில் தான் பராஶரர்,

“ ஶாவவதெஉஹவஸ்தா ஶ-க்ஷீணீகூஷஜநிி ।
சுநூஷ-ஆவதாரெஷ- விஷொ: ஸ்ரீரநவாயிநீ ॥ ”

என்று பாடினூர். ‘ஸஹைவஸ்ரீயா’ என்பதால் பராஶரர் விஷ்ணுபுராண காநத்தை ஸூசிக்கிருர்.

வ்யவஸாயன்.—இந்த அம்ருத மதந ஸம்ரம்பாவஸரத்தை அநுபவிக்க வேணும்.

“ச்வஸிச்வாஹாயீஶ: ச்வஸிதஜலதஜ்ஞாவஜவச்ச:
ச்வஸித்வா ஸ்ரேயாம்ஶு: ச்வஸிதஜலதவிஹ்ருதித்ருதி:।
ஸுதிக்ஷோதே ஸிந்தோர்யதநவநிகேதாயத்தமிதி:
விஷாதம் தேவாநாம் விகடயதி வைகுண்டகமட: ॥”

முப்பத்து முக்கோடி தேவர்களும், கணக்கற்ற அஸுரர் கூட்டங்களும் மலையைக் கட்டி இழுத்துக்கொண்டு கடல் கடைகிருர்கள். அலையோசையுடன் கடிநமான ஆமையோட்டின் பேரில் மலை சுழல்கிறது. தாங்கமுடியாத பேரிரைச்சல். ‘கமட வரஷுகமொஹஃஷம் தநு:’ என்று முராரி ஶிவ தநுஸ்ஸின் காடிந்யத்தை வர்ணித்தார். எத்தனை ஶப்தம்! ‘இதோ உச்சைச்ரவஸம் என்னும் இந்த்ரன் குதிரை கிளம்புகிற’ தென்று கூக்குரல். ‘இதோ ஐராவதம்; இதோ சந்த்ரன்; இதோ அம்ருதம் கொப்பளித்து எழுகின்றது’ இப்படிப் பேர் இரைச்சல்கள். ஸமுத்ரமே அலைத்துக் கோஷிப்பது அதன் ஸ்வபாவம்; அதிலும் இத்தனை வேகமாய் மலையைக் கொண்டு கடையும்போது என்ன சப்த மிருக்கும்? இத்தனை கூக்குரலிலும் இக்கூர்மர் நித்ரை காடமாயிருக்கிறது; துளிகூடக் கெடவில்லை. ஶப்தம் மட்டுமா? மேலே மலையைச் சுமக்கிருர்- அது சுழலும் மலை; இத்தனை ஸம்ரம்பத்தில் அயர்ந்து தூங்கிக்கொண்டு தேவர்களுடைய விஷாதத்தை (வருத்தத்தை) விகடநம் செய்கிருர் (போக்குகிருர்.) கூர்மம் தன் அவயவங்களை உள்ளிழுத்து ஒடுக்கிக்கொள்வது போல, இந்த்ரியங்களை உள்ளிழுத்து அடக்குவர் யோகிகள் என்று கீதை சொல்கிறது. கூர்மர் நித்ரை யோக நித்ரை. இந்த அவதாரத்தில் ஸாதுபரித்ராணம் மட்டும்; துஷ்க்ருத்துக்கள் விநாஶ மில்லை. இவர் வைகுண்ட கமடர்; பரிச்சேத மற்ற மிகப் பெரிய கச்சபர்; வைகுண்டரென்னும் பகவானுகிய கமடர்; ந்ருஸிம்ஹர் வைகுண்ட கண்டீரவர். அவதாரங்கள் நாடகங்க ளென்பர். நாடகங்களுக் கேற்றபடி அந்தந்த அவதாரங்களில் அத்புதக் காட்சிகளையும் அத்யக்ஷணம் செய்துவைக்கிருர். அவதாரத்திலும் ப்ரஹ்மத் தன்மையைக் காட்சி தருகிருர்.

விவேகர்.—முக்குண ப்ரக்ருதியான இக்கடலும் பகவானுடைய இவ்வவதார பரிக்ரஹத்தால் இன்னம் பரிசுத்தமாயிருக்கிறது. [பகவானுடைய திருமேனியை ஆதாரமாக வைத்துக்கொண்டு மலைமத்தால் கடைவதாலும், பகவானுடைய மூச்சுக் காற்றுகளாலும், ஸமுத்ரம் முன் ப்ராக்ருதமாயிருந்தது ஸம்ஸ்க்ருத மாயிற்று என்று கூறிய பொருள் ஸ்வாமி திருவுள்ளத்தி லுள்ளதை இது காட்டும்.] காமதேநு கல்பக வ்ருக்ஷம் சிந்தாமணி முதலிய அத்யுத்க்ருஷ்ட வஸ்துக்களைப் பயந்த ஹர்ஷத்தால் ஸமுத்ரம் அலைத்துக் கொந்தளித்தது தாண்டவ நர்த்தநம் செய்வதுபோல் இருக்கிறது.

ஸுமதி.—பார்க்கின்ற நம் ஹ்ருதயமும் அப்படியே ஹர்ஷத்தால் நர்த்தநம் செய்கிறது; ஆநந்தத் தாண்டவ மாடுகிறது.

வ்யவஸாயன்.—இங்கே நோக்கவேணும்:—

“ உபஜத்ர விஶ்வஜநநீ ஸஹோத்திதா
கமலா விகாஸிகமலோதரஸ்திதா ।
ஶமதாந்நஸ்ய ஸுஜயஸ்யவீசிகா
பயிஸோஸ்ய ரக்ஷதி ஜகந்தி வீக்ஷணை: ॥ ”

காமதேநு, கல்ப வ்ருக்ஷம், சிந்தாமணி, சந்த்ரன், அம்ருதம்—இவை யெல்லாம் ஸ்ரீ தேவி அவதரிக்கையில் கூடப் பிறந்தவை. ஸ்ரீ தேவியின் ஸ்வபாவ லேஶம் அவற்றிற்கு முண்டு.

“ தத: ஸ்புரத்காந்திமதீ விகாஸிகமலே ஸ்திதா ।
ஸ்ரீ தேவீ பயஸஸ்தஸ்மாதுத்த்திதா த்ருதபங்கஜா ॥

“ தாம் தத்ருஶு: ஸுரா: ஸர்வே ஸ்ரீ ஸூக்தேந ததுஷ்டுவு: ।”

என்று பராஶரர் அம்ருத மதநத்தில் தேவி மேலே கிளம்பி வந்ததை வர்ணித்தார். ‘விகாஸிகமலே ஸ்திதா’ என்ற பராஶரர் வார்த்தைகளையே வைத்து ‘விகாஸிகமலோதரஸ்திதா’ என்று ச்லோகத்தை அமைத்துப் பராஶரர் ச்லோகங்களை ஸ்வாமி நினைப்பூட்டுகிறார். ‘கமலோதரபத்மநவ்ம்’ என்ற காளிதாஸர் ஶாகுந்தல ச்லோகமும் நினைவுக்கு வரவே, ‘கமலோதரஸ்திதா’ என்றமைந்தது. அலர்ந்த அம்புயத்தினுள்ளே வாஸம் செய்பவள் தாமரையாளான ஸ்ரீதேவி. ‘ஸா ஸ்ரீ: ஸ்வாஸநவிடவநம் விஹாய’ என்றபடி, தன் தாமரை வந வாஸத்தை விட்டுவிட்டுப் பகவானை அடைந்தவள். [ஸ்தாநம் பஶ்யாஸ்ஸரவிஜவநம் விஷ்ணுவக்ஷோஹாயம்வா] தாமரையில் வாஸத்தை விட்டு ‘பஶ்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:’ என்று பராஶரர் வர்ணித்தபடி பெருமாள் திருமார்பில் ஏறிக்கொண்டாள். உலகத்தை நியமிக்கும் பகவானுடைய ஹ்ருதய ஸ்தாநமான திருமார்பையே பீடமாகச் செய்துகொண்டு ‘அகலகில்லேனிறையும்’ என்று அப்பீடத்தில் நித்ய வாஸம் செய்கிறாள். அவன் ஹ்ருதயத்தைத் தன் காருண்ய ப்ரபையால் குளிரச் செய்துகொண்டு உலகத்தைக் காக்கிறாள். [‘வக்ஷ: பீடீம் மது விஜயிநோ பூஷயந்தீம் ஸ்வகாந்த்யா’; ‘ரக்ஷதி ஜகந்தி வீக்ஷணை’] தன் கருணை நிரீக்ஷண ஸந்துக்ஷணங்களால் உலகத்தை ரக்ஷிக்கிறாள். அதற்கு முன் அதன் லாப மில்லாமல், உலகம் க்ஷேமக் குறைவால் நஷ்டம் போல் க்ஷீணித்திருந்தது. இப்பொழுது அவள் கடாக்ஷங்களின் லாபத்தால் அநந்தோதய மாயிற்று. ‘நஷ்டம் ப்ராகப்ரதிஹதம்’ என்பது ஆளவந்தார் பாஷ்யம். ஒருபொழுதும் நிக்ரஹ மென்பதே தெரியாதவள்; நிக்ரஹிக்கவே யில்லை; அவள் அநுக்ரஹ கடாக்ஷத்தின் லாப மில்லாமல் இருந்தது மட்டுமே என்பது ரஸம். ஸ்ரீதேவி ஏறியிருக்கும் பீடம் உலக ரக்ஷண பீட மென்று ரஸம்; ஶாச்வத பீடம். அவன் அகாராத்தமாக ஆவது இவளுடைய வீக்ஷணங்களாலே. உலகத்தை வீக்ஷணம் செய்வது மட்டுமல்ல; அவரை வீக்ஷணம் செய்து கொண்டு தன் இங்கிதங்களால் அவரை நியமித்து வருகிறாளென்றும் ரஸம். ‘ஹரியின் வக்ஷஸ்தலத்திலிருந்த லக்ஷ்மீ தேவியால் கடாக்ஷிக்கப்பட்ட தேவர்கள் பரமாநந்த மடைந்தார்கள்’ என்பது பராசரரது ஸ்ரீ ஸூக்தி.

[தொடரும்]

ஸ்ரீயை நம:

நமது கடமை

[ஸ்ரீ. உப. D. T. தாதாசார்ய ஸ்வாமி, S. V. O. R. இன்ஸ்டிட்யூட், திருப்பதி.]

விவேகம் பெறுதவர்கள் தாம் செய்யவேண்டியவற்றைச் செவ்வையாகச் செய்கின்றனர் என்று எதிர்பார்ப்பதற் கில்லை. செய்யக்கூடாததையே அவர்கள் செய்வதும் இயற்கையே. இதைக் கண்டு விவேகிகள் வருந்துவார்கள். இதில் ஸம்சய மில்லை. ஆனல் இதோடு விவேகிகளின் பொறுப்பு முடிந்துவிடாது. அவிவேகிகளுக்கு விவேக முண்டாகும்படி செய்யவேண்டியதும் விவேகிகளின் கடமை.

இப்போது பொதுஜனங்களில் பெரும்பான்மையோர் நமது ப்ராசீந பழக்கவழக்கங்களில் ஆதரவற்று அவற்றை உதாஸீநம் செய்துவருகின்றனர். அவற்றின் முக்யத்வத்தையும் ஆவச்யகதையையும் அவர்கள் அறிந்திலர். இவ் விஷயத்தில் அறிவு உண்டாக அவர்களுக்கு வஸதி யில்லை. பள்ளிக்கூடங் களிலும் மற்ற விடங்களிலும் இவ்வித அறிவு உண்டாகக்கூடிய போதநம் ஒன்றும் மாணவ மக்களுக்குச் செய்யப்படவில்லை. அதோடு நிற்காமல் இதற்கு நேர்விரோதமான எண்ணம் உண்டாகும்படியான போதநம் பலமாக நடக்கின்றது. இப்படி உண்மை யறிவிற்கு ஸாதந மில்லாமலும் விபரீதப் போக்குக்குப் பரிபூர்ண ஸாதநமும் இருக்கும்போது, நமது ஜநங்கள் ஸரியான நிலையில் இராததைப்பற்றி அவர்களிடத்திலேயே குற்றம் காண்பது உசித மன்று. அவர்கள் எவ்வளவு விபரீதமாக நடந்துகொண்டாலும் நம்மையும் நமது ஆசாரங்களையும நமது முன்னோர்களையும் எவ்வளவு த்வேஷித்தாலும் நாம் அவர்களிடத்தில் சிறிதும் கோபித்துக்கொள்ளாமல் அவர்களுக்கு விவேகம் உண்டாகும்படியும் நல்ல வழியில் ருசி உண்டாகும்படியும் செய்யவேண்டும். இது எளிதான கார்ய மன்று. ஸ்வல்ப காலத்தில் ஸாத்யமுமன்று. ஆயினும் நாம் முயலவேண்டும். கொஞ்சமும் தாமதிப்பதற் கில்லை.

இதற்காக நாம் உடனே செய்யவேண்டிய கார்ய மென்ன? எப்படிச் செய்வது? யார் செய்வது? என்ற கேள்விகள் இங்கே எழுகின்றன. புத்தி மான்கள் ஆலோசிக்க வேண்டும்; தகுந்த வழி காட்டவேண்டும். 'இனி ஒரு க்ஷணமும் நாம் வெறுமனே இருக்கக்கூடாது; ஏதாவது செய்தே ஆக வேண்டும்' என்ற எண்ணம் நம்மவர்களில் ஒவ்வொருவருக்கும் வந்து விட்டால், பிறகு உடனே ஏதோ ஒரு விதமாய் நாம் இன்னது செய்யவேண்டு மென்ற தீர்மாநம் தானகவே ஏற்படு மென்பது அடியேன் கருத்து. இருக்கும் நிலையை விவேகமுள்ள ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டு மென்று ஸவிநயம் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

இப்படி உடனே நாம் செய்யவேண்டியதைப் பற்றி மஹாமேதாவிகளே தீர்மானித்துக் கூறவேண்டுமாயினும், அடியேன் புத்திக்கு எட்டின வரையில் கொஞ்சம் இங்கு விண்ணப்பிக்கிறேன். முதலில் அக்ரஹாரங்கள் சீர் படவேண்டும். பல அக்ரஹாரங்களில் பலபேர் பல காரணங்களினல் வெளியே

சென்று விட்டபடியால், முன்னிருந்த ஶோபையும் கலகலப்பும் அறவே ஒழிந்து விட்டன. பல அக்ரஹாரங்கள் முற்றிலும் பாழாய் விட்டன. இது யாவரும் அறிந்த விஷயமே. இப்படி முற்றிலும் அழியாமல் ஏதோ ஒரு விதமாய் இருந்து வரும் அக்ரஹாரங்களைப் பற்றி முதன்முதலில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அக்ரஹாரங்கள் சீர்பட்டு, அங்குள்ளவர்கள் தாங்கள் இருக்க வேண்டிய நிலையி லிருந்துவந்தால் அவ்வக்ரஹாரங்களும அவற்றைச் சுற்றி யுள்ள ஊர்களும் வெகு சீக்ரம் வெகு ஸுலபமாகச் சீர்திருத்தமடைந்து விடும்.

அக்ரஹார வாஸிகள் தாங்களே தம் க்ஷேமத்தையும் கடமையையும் பற்றி ஆலோசிக்கவேண்டும். நகரங்களில் போய்க் கஷ்டப்படாமல் ஸவஸ்தா நத்திலேயே வஸிக்க நேர்ந்ததை அவர்கள் பெரும் பாக்யமாகக் கருதவேண்டும். இதற்கு மாறுதலாக எண்ணி அவர்கள் வருந்துவார்களாயின், அது அவிவேகமே யென்று அடியேன் கூசாது கூறுவேன். இவ்வித அவிவேகத்திற்கு ஹேது வான தௌர்ப்பாக்ய மில்லாதவர்கள், 'நகரம் என்கிற நரகத்தில் வாஸத்தை எமக்கு எம்பெருமான் ஸங்கல்பிக்காமல் இருக்கின்றானே' என்று ஸந்தோஷப் படு மவர்கள், தமக்கு அநுகுணமான ஜ்ஞாநாநுஷ்டாந பூர்த்தியாலே அந்த உசித ஸ்தல வாஸத்தைப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும். ஜ்ஞாநாநுஷ்டாந பரிபூர்த்தி உள்ள ஒரு ஸ்வாமி ஓரிடத்தில் எழுந்தருளியிருந்தால், அது அந்த ஸ்வாமிக்கு மாத்ரமே ஹித மென்பதில்லை; பின் உலகத்திற்கே ஹிதம். இது ஸர்வ சாஸ்த்ர ரஹஸ்யம். இதைச் செவ்வனே அறிந்திருந்தார்கள் ப்ராசீந ஸர்வ ஜநங்களும். அதனால் பரஸ்பரம் பஹுமாநமும் ஆதரவும் ஒற்றுமையும் இருந்துவந்தன. பிற்காலத்தில் அந்த ரஹஸ்யம் மறக்கப்பட்டது. ஸர்வவித அநர்த்தங்களும் உண்டாயின. நாம் இப்போது மறுபடியும் அந்த உண்மையை உலகமெல்லாம் அறியும்படி நடந்துகொள்ளவேண்டும். விவேகம் பெற்று விளங்கவேண்டிய நம்மவர்களிலேயே வெகு பேர்களுக்கு இந்த விஷயம் தெரி யாதென்பது ஸ்பஷ்டமாய்க் காணப்படுகின்றது. ஜ்ஞாநம் அநுஷ்டாநம் ஆத்மகுணம் இவைகள் நிறைந்த ஒரு ஸ்வாமி ஓர் ஊரிலிருந்தால், அவர் அந்த ஊருக்கு ஒரு ஸூர்யன் என்னலாம். இவருடைய ஸமீப ஸ்திதி மாத்ரத் தாலேயே சுற்றி யுள்ளவர்களுக்கு, விவேகமும் நல்லொழுக்கமும் தானாகவே உண்டாகும். உபதேஶமும் பெற்றால் இன்னும் விசேஷமாகவே அவை உண்டாகுமென்று சொல்லவேண்டிய அவச்ய மில்லை. ஆகவே அக்ரஹார வாஸிகள் சிறிது விழித்துக்கொண்டு தமது கடமையைச் செய்யவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ கோதாயை நம:

மதுராலாபம்

[ஸ்ரீ உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M. A., வித்வான் L. T., திருவையாறு]

மனிதனுடைய புத்தி விசித்ரமானது. சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களிலும் 'கரந்தெங்கும் பரந்துள்ள காரணன்' என்பவன் உண்டு என்பதை மறந்தவன் அவனைவிட யாருமில்லை. சிலர் கடலைக் கடக்க முயன்றனர். சிலர் மலைகளை உடைக்க முயன்றனர். சிலர் பாறைகளைத் தவிடுபொடி யாக்கினர். சிலர் வானத்தில் உலாவ யோசித்தனர். சிலர் காலத்தை வெல்ல முயன்றனர். சிலர் தேசங்களை அடிப்படுத்தி "[illegible]" என்றபடி மண்ணையும் விண்ணையும் ஒக்க ஆள முயன்றனர். அம்முயற்சி இன்னும் ஓய்ந்த பாடில்லை. மற்றும் சில ரோதங்களுள், 'அறிவு என்பது நம் அதீநம்; அதில் அகப்படாத தில்லை' என்று சொல்லிக் கொண்டனர். இதன் பயனாய்க் கடவுள் உண்டு என்றனர். அவர்தம் ஸ்வரூப விபவங்களைக் கரதலாமலகமாகக் காட்ட முன்வந்தனர். நெறி இது என்றார்; நிற்கும் முறை இது என்றார்; அறிவினால்தான் ஆநந்த மென்றார்; அறிவுக்கு இலக்காக ஆகாதது இல்லை யென்றார். உலகின் உற்பத்தி, நீர்ப்பரப்பின் நிலை, காற்றின் கதி, வானின் தன்மை, உயிரின் தோற்றம் இவற்றையெல்லாம் பற்றிப் பரக்கப் பேசினர். மனித அறிவின் ஆற்றலில் மயங்கினர். வாதமாகிற இன்பத்தில் இறங்கினர்; மண் இது விண் இது வென்று வகுத்தனர். மாதவன் ஒருவன் உண்டு என்பதை மறந்தனர். மனிதனால் செய்ய இயலாத செயல் இல்லை என்றார். கருணை வடிவமான தெய்வம் பார்த்திருக்க, மனிதன் தெய்வ க்ருத்யங்களைத் தன் கையில் எற்றுக் கொண்டான். தெய்வம் உண்டென்ற நினைவுடையாருடைய செயல் சொல்லத்தக்கதோ? ஐயோ மனிதனே! நீ விடும் ச்வாஸம் ஸ்ரீதரனுடைய திவ்ய ஸங்கல்பாதீந மென்று அறிந்தால்— ஐயோ! அதை மாத்ரம் நீ உணர்ந்தால்— உன் அறிவில் இவ்வளவு மயங்கமாட்டாயே. கண்ணாடியில் குரூபியும் தன் வடிவைக் கண்டு மயங்கி இன்புறுவது போல் உன் படிப்பைக் கண்டு நீ வியக்கிறாய்.

உலகத்தில் எத்தனை தத்வசாஸ்த்ரிகள் இருந்து சென்றார்கள். எவ்வளவு அழகிய பேச்சாளிகள்! எப்படிப்பட்ட செயலாளிகள்! எவ்வளவு திட்டம் போடுபவர்கள்! மநஸ் தத்வத்திற்கும் புத்தி தத்வத்திற்கும் உள்ள நுண்ணிய பேதங்களைப் பல ஸித்தாந்தங்களை மேற்கோளாக்கிச் சொல்ல வல்லவர்கள் எவ்வளவு பெயர்கள் இருந்தார்கள்! ஆட்டை மாடென்றும், மாட்டை மனிதனென்றும் தர்க்க ஜாலத்தினால் காட்டவல்லவர் எத்தனைப் பெயர்கள்! அவர்களெல்லாம் எங்கே? அவர்களது அரிய ஆராய்ச்சித் திறன் எங்கே? 'இதுதான் நன்மை, இதுதான், தீமை; இதுதான் ந்யாயம்' என்று கைகாட்டிச் சொல்லும் மனிதன் கொஞ்சம் யோசித்துக் கொஞ்சம் அடங்கினால் எவ்வளவு நன்மை இருக்கக்கூடும்! மனித அறிவுக்குக் குறைவுபாடுகள் உண்டென்று உணர்த்து

பவர் யாரோ? கருணைக்கடலான கண்ணபிரானின் அன்பில் உழன்று ஆநந்தக் கூச்சலிட்ட ஆழ்வார், அவனது ஆச்சர்ய சக்தியையும் பரத்வத்தையும் நினைத்த வளவில் மூர்ச்சையாகி ‘வளவே ழுல’கில் அவனுடைய பரத்வத்தைப் பரக்கப் பேசி மனிதனுடைய இழிவை வெளிப்படுத்துகிறார். இப்படி நித்யஸூரிகளான ஆழ்வார்கள் கைவிட்டு வாடிப் பேசத் திணறிய கடவுள் தத்வத்தை எடுத்துரைப்பது யார்க்கு ஸாத்யமாகும்? அறிவாளிகள் எங்கே போனார்கள்? சாஸ்த்ரம் வல்லவர்கள் எங்கே போனார்கள்? திட்டக்காரர்கள் எங்கே போனார்கள்? தத்வ சாஸ்த்ரிகள் எங்கே சென்றார்கள்? அறியோம்.

மனிதனே! எலி யெலும்பனை நீ மார்தட்டி நிற்பதைக் கண்டு மண்ணும் விண்ணும் வியக்கும். வானும் சுடர்களும் கடலும் மலையும் திசையும் எவனது ஸங்கல்ப லேசத்தில் நிற்கின்றன? எவனுடைய நித்ய ஸங்கல்பத்தினால் இருளும் ஒளியும் காற்றும் கனலும் முறையில் நிற்கின்றன? நாம் ஓடுவதும் ஆடுவதும் நிற்பதும் இருப்பதும் எல்லாம் அவன் அருளன்றோ? அவனுடைய சீற்றத்தை நினைக்கப்போமோ? வான் பிளக்கும். வையகம் நொறுங்கும். எழ்கடலும் கொந்தளிக்கும். ஸப்த குலாசலங்களும் பொடியாகும். சுடர்கள் விழும். தாரகைகள் தவிடு பொடியாகும். மனிதனே! மாதவன் உண்டோ இல்லையோ ஆராய்ந்துபார். நெருப்பே இல்லையென்று சொல்லி நெருப்பில் விரலை விட்டுப் பார். சுடாதோ?

கதிரவன் அஸ்தமித்தவுடன் கன இருள் பரவி வருங்காலத்தில் வானெங்கும் ஒளியற்று நின்ற நிலையைக் கண்டு ஓர் அறிவிலி ‘ஸூர்யனே இல்லை’ என்றானாம். அவனது அறிவு போலவே மனித அறிவு. [In the evening twilight when a thin sheet of darkness uraps the earth the fool has said within himself, ‘There is no Sun’] நம் ஆசார்யர்கள் நம் ஆழ்வார்கள் மனிதனுடைய ஆற்ற லின்மையையும் அடக்கத்தின் இன்றியமையாமையையும் வற்புறுத்தினர். அலெக்ஸாண்டிரியா நகரத்தில் வஸித்த க்ளெமண்ட் என்னும் பெரியார் ‘மனிதன்’ என்ற சொல்லுக்குப் ‘புழு’ என்று அர்த்தம் செய்ய வேண்டும் என்பாராம்.

தெய்வமே! இம்மனிதன் என்னதான் பேசுகிறான்! ‘நதத்ரு தாரகா ஹாஸ்’ என்னும் லோக விசேஷத்தைக்கூடத் தன் வாதத்திற்கு உள்ளாக்குவான். பரமபதத்தில் நுழைவது ஓர் பெரிய கோபுர வாயிலாலா? அல்லது ஒரு உபவநத்தின் வாயிலாலா? அதற்கு நுழையும் வாயில்கள் இரண்டா மூன்றா? பரமபதத்தின் சுவர்களில் சுத்தமான வஜ்ரக் கற்களா? அல்லது சிவப்பு மணிகளுங் கலந்து இழைக்கப்பெற்றனவா? இவ்வரிய விஷயங்களை பேசுவல்லார் உண்டோ? அம்ம! அம்ம! மனிதனே! உன்னைப் படைக்கும்பொழுது உன் உடலில் விலையுயர்ந்த இருதயம் என்னும் கருவியை இந்திராபதி அமைத்து வைத்திருக்கிறான் என்பதை மறந்தனையே! உலகில் நீ பிறந்தது எதற்கு? த்யாகத்திற்கு – அன்பு செய்வதற்கு–ஆறுத லளிப்பதற்கு–தொண்டு செய்வதற்கு–அன்பினால் அமலனை அடைவதற்கு. பிறர் துயரைக் களைய முயன்றுபார். பிறர்க்குத் தொண்டு செய்துபார். இருள்தரும் இம்மாஞாலத்தில் உன் அன்பின் மெல்லிய ஒளி பரந்தால்

அது வைகுந்த மாகும். வைகுந்தன் வாழ்விற்கு ஏதுவாகும். வாஸுதேவன் உகப்பிற்கு வாழ்விடமாகும். இறைவனது எல்லையற்ற கருணைக்கு ஏங்கி நிற்கிற நீ, யார்க்கு எவ்வளவு கருணை வழங்கச் சித்தமா யிருக்கின்றனை? தெய்வம் எங்கே உண்டு? அன்பில் – தொண்டில்–அன்பிலும் தொண்டிலும் எழுந்த ஆநந்த வெள்ளத்தில்–நித்ய ஸாந்நித்யம் செய்கிறான். பொறுமை எவ்வளவு அழகு! இதனாலன்றோ நம் நாராயணனுக்குக் கருணையையும் பொறுமையையும் இருபத்நிகளாகச் சொல்லப்பட்டது.

வாஸுதேவா! உன் பெயர் என்ன? ஜுபிடர் என்றார் சிலர்; ஜீயஸ் என்றார் மற்றுஞ் சிலர்; ஜிஹோவா என்றார் சிலர்; சிறந்த தண்டனைக்காரர் என்றார் சிலர். பல ப்ரதாநம் செய்பவன் என்றார் சிலர். சிறந்த நீதிமான் என்றார் சிலர். சிலர் நிகரற்ற நடுநிலைமைக்காரன் என்றார். எங்கள் ஆழ்வார் உன்னை எங்ஙனம் அழைத்தார்? 'கருணைக்கடல்' என்றார்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸர்வஜித்வூ மார்கழி (தநுர்) மீ

16–12–47.	1உ செவ்வாய்க்கிழமை	...	சாப சுக்ல சதுர்த்தி திதி: தநுர் மாஸ ஸங்க்ரமண தர்ப்பணம். தநுர் மாஸா ராதநாரம்பம்
20–12–47.	5உ சனிக்கிழமை	...	ஸ்ரீ அ. மடம் 41-ம் பட்டம் காருகுரிச்சி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
24–12–47.	9உ புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதசி: [வைகுண்ட ஏகாதசி]
1—1—48.	17உ வியாழக்கிழமை	...	பஞ்சமி – ஷஷ்டி திதி த்வயம்
2—1—48.	18உ வெள்ளிக்கிழமை	...	சாப க்ருஷ்ண ஸப்தமி திதி
6—1—48.	22உ செவ்வாய்க்கிழமை	...	ஸ்ரீ அ. மடம் 40-ம் பட்டம் காருகுரிச்சி ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ரமஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
7—1—48.	23உ புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
8—1—48.	24உ வியாழக்கிழமை	...	ஸ்ரீ தொண்டரடிப்பொடி யாழ்வார் திருநக்ஷத்ரம்
10–1—48.	26உ சனிக்கிழமை	...	அமாவாஸ்யை திதி: ஸர்வ அமாவாஸ்யை
11–1—48.	27உ ஞாயிற்றுக்கிழமை	...	சாப சுக்ல ப்ரதமை திதி
12–1—48.	28உ திங்கட்கிழமை	...	அதிதி
13–1—48.	29உ செவ்வாய்க்கிழமை	...	சாப சுக்ல த்விதீயை திதி: போகிப் பண்டிகை

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸதாசார்ய ஸூக்தி ஸௌஹார்த்தம்

[ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத கலாசாலை: திருவையாறு]

உபாதாநோபாதேய பாவமானது அபிந்நங்களுக்குப்போலவே அப்ருதக் ஸித்தங்களான பிந்ந வஸ்துக்களுக்கு முண்டு என்பதாக ஸித்தாந்தம். ஆகவே

'ந ஹ்யத்யந்தபிந்நயோ: ப்ரக்ருதிவிகாரபாவ உபாதாநோபாதேயபாவோ வா இதி நியம:'

என்று முண்டகோபநிஷத் பாஷ்யத்திலே அருளியது மிகவும் உபபந்நமே. இதில் ஸ்ரீ பாஷ்யகாராதி பூர்வாசார்ய ஸூக்தி விரோத மிருக்குமோ வென்பதாகத் தமது ஸம்ஸயத்தை விளக்கிச் சென்ற மாதத்து ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸஞ்சிகையிலே நம் ஸம்பாதக ஸ்வாமி இதின் ஸாமஞ்ஜஸ்யத்தைத் தெரிவிக்கும்படி நியமித்திருக்கிறார். அந்நியமநத்தைச் சிரமேற்கொண்டு, ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமியைப்போன்ற மஹநீய ஸஹ்ருதய ஸந்நிதியில் இந்த ஸதாசார்ய ஸூக்தி ஸௌஹார்த்தத்தை ஸவிநயம் விஜ்ஞாபநம் செய்யத் தொடங்குகிறேன்.

1. நையாயிகர் ஸமவாயிகாரணம் என்று வழங்குமதையே ஸித்தாந்திகளான நாம் உபாதாநகாரண மென்கிறோம். ஸமவாய பதார்த்தம் ஸித்தாந்தத்திலே இசையாமையால் ஸமவாயி காரணத்தை உபாதாநம் என்ற நாம பேதத்தால் வழங்கவேண்டிய தாயிற்று. அவயவிக்கு அவயவமும், ஜந்யங்களான குண க்ரியைகளுக்கு ஆச்ரயமும், ஸமவாயி காரணமாகிறது என்பது நையாயிகர் பக்ஷம். ஸித்தாந்தத்திலோ அவயவாதிரிக்தமான அவயவி கிடையாது. இரண்டு தர்மிகளும் ஒன்றே. தந்துத்வ படத்வங்களாகிற தர்மங்களுக்கே பேதம். ஸமவாய ஸம்பந்தத்தாலே தந்துவில் உண்டாகும் படமாகிற அவயவிக்குத் தந்து ஸமவாயிகாரணம் என்றார் நையாயிகர். அவயவியையும் ஸமவாயத்தையும் இசையாத ஸித்தாந்திகளோவெனில், காரண கார்யங்களாகிய தர்மி ஒன்றேயாகையால் தாதாத்ம்ய (அபேதம்) ஸம்பந்தத்தாலே படம் உண்டாவதற்குத் தந்துவானது உபாதாநகாரண மென்பதாக இசைந்தார்கள். இப்படி அவயவியைக்குறித்து அவயவம் ஸமவாயி காரணம் என்று நையாயிகர் இசைந்தவிடத்தில் அபிந்நங்களுக்கு உபாதாநோபாதேய பாவமென்றே கொண்டாலும், ஜந்யகுணம் க்ரியை இவைகளுக்கு ஆச்ரயமானது ஸமவாயி காரணம் என்று அவர்கள் இசைந்தவிடத்தில் ஸித்தாந்திகள் செய்யும் நிர்வாஹ மென்ன வென்பதை ப்ரக்ருதத்தில் முக்யமாய் விசாரிக்க வேண்டும். ஸம்யோகாதிரிக்தமாக க்ரியையை இசையவேண்டிய தில்லை என்பதாக ஸ்ரீ தேசிகன் நிஷ்கர்ஷித்தருளினார். ஆகிலும் சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்த ஸம்யோகாதிகளான அத்ரவ்யங்கள் பத்தும் த்ரவ்யத்திலே யுண்டாகின்றன வன்றோ? நையாயிகர் ஸமவாய ஸம்பந்தத்தாலே ரூப ரஸாதிகளைக் குறித்து

ஆச்ரய த்ரவ்யமானது தாதாத்ம்ய ஸம்பந்தத்தாலே ஸமவாயிகாரணம் என்றார்கள். ஸமவாயத்தை இசையாத யாமோ ஸமவாயத்திற்குப் பதிலாக அப்ருதக்ஸித்தி என்கிற ஸம்பந்தத்தைக் கொண்டிருக்கிறோம். அப்ருதக்ஸித்தி ஸம்பந்தத்தாலே சப்த ஸ்பர்சாதிகள் உண்டாவதற்குத் தாதாத்ம்ய ஸம்பந்தத்தாலே காரணமாயிருக்குமதுவும் உபாதாந காரணமே என்றும் கொள்ளவேண்டும். இந்த உபாதாநோபாதேயங்களில் த்ரவ்யம் ஒன்று; மற்றொன்று அத்ரவ்யம்; ஆகையாலே இவைகளுக்குப் பரஸ்பரம் பேதமே யுள்ளதன்றோ? அபிந்நங்களுக்கே உபாதாநோபாதேய பாவம் என்கிற நியம முண்டாகில் அந்த நியமத்திற்கு சப்த ஸ்பர்சாதிகளைப்பற்றி, ஆச்ரயமான த்ரவ்யம் உபாதாந மாகுமிடத்தில் பங்கம் ஏற்படுகிறது. ஆகவே, ‘ நஹ்யபிந்நயோரேவோபாதாநோபாதேயபாவ இதி நியம: ’ என்பது ஸமஞ்ஜஸமே.

2. ப்ருதிவிக்குக் கறுப்பு நிறம் இயற்கையில் ஏற்பட்டது. மற்ற வர்ணங்கள் பாகத்தினால் தேஜஸ் (ஸம்யோகம்) வந்தேறியானவை என்பதாக ந்யாயஸித்தாஞ்ஜநத்திலே ஜட த்ரவ்ய பரிச்சேதத்திலே ஸ்ரீ தேசிகன் ஸாதித்தார். பாகஸ்தலத்தில் கடத்வாவஸ்தை உண்டாகாமையால் கடத்திற்கு உத்பத்தியைக் கொள்வதற்கில்லை. புதிதாக உண்டாகும் ரூபாந்தரத்திற்கு ஆச்ரயமான கடமானது உபாதாந காரணமே. ஆகாசத்திலே சப்தங்கள் க்ஷணந்தோறும் உண்டாகின்றனவே. ஆச்ரயத்திற்கு அவஸ்தாபேதத்தாலே ப்ரதிக்ஷணம் உத்பத்தி யில்லையன்றோ? ஸ்திரமான ஆகாசமானது காதாசித்கமாக உண்டாகும் சப்தங்களுக்கு உபாதாந காரணம் என்பதை மறுக்க இயலாதே. இவ்வாறாக: பாகஜங்களான ரூபாதிகள் சப்தங்கள் இவைகளுக்கும் ஆச்ரய த்ரவ்யங்களுக்கும் உபாதாநோபாதேய பாவம் சொல்லுமிடத்தில் பிந்நங்களுக்கும் அதை இசைந்தாகவேண்டும். ஆனால் ‘சப்த ஸ்பர்சாதிகளுக்கு அபூர்வமாக உத்பத்தியை இசைந்தால் ஸத்கார்யவாத பங்கம் ஏற்படுமே’ என்பதாகச் சிலர் நினைக்கலாம். இந்த ஆக்ஷேபத்திற்கு ஆரம்பணாதிகரணத்திலே நய மயூகமாலிகையில்,

‘ நத்ரவ்யஸ்ய நாசோத்பத்தீ கார்யகாரணபாவவ்யவஸ்தாபகௌ ।
ஸத்கார்யவாதோ வ்யவஸ்திதோ த்ரவ்யமாத்ரவிஷய: ।
நத்ரவ்யஸ்ய நாசவத் நாசோத்பத்தி: ।’

என்று தீக்ஷிதர் சொல்லும் ஸமுசித ஸமாதாநம் இங்கு அநுஸந்தேயம். ‘ஸத்கார்யவாதம் என்பது த்ரவ்யங்களைப்பற்றியே யன்றி அத்ரவ்யங்களைப் பற்றி யன்று’ என்பது இதன் திரண்ட பொருள். ஸ்வாமி ஸ்ரீ தேசிகனே அதிகரண ஸாராவளியில் ப்ரக்ருத்யதிகரணத்திலே, ‘ஈச்வரன் வேறு வஸ்துக்களோடு தனக்கு ஏற்படும் ஸம்யோகத்திற்கு உபாதாநகாரண மாகிறான்’ என்று கண்டரவேண அருளியிருப்ப தொன்றே பர்யாப்தமானது.

‘ ஸம்ஸ்ருஷ்டம் யோகமேதத்விஷயமுபாதாநமப்யாஹுரேநம்’

என்பது அங்குள்ள ஸ்ரீ ஸூக்தி. இவ்வாறாக அநுக்ரஹித்திருப்பதனால்,

' நஹ்யஸிந்யொஸெவொவாஃாெநாவாஷெயஹாவஜ திநியஃ:'

என்பதே ஸ்ரீ தேசிகன் ஸித்தாந்தமும் என்று தேறுகிறது.

3. அன்றிக்கே: ஸ்தூல சேதநா சேதந விசிஷ்டம் கார்யம் என்பதே விசேஷணங்களுக்கும் உபாதேயத்வத்தை (கார்யத்வம்) த்ருட மாக்குகின்றது. ஸத்வாரகமாகவே ப்ரஹ்மத்திற்குக் கார்யத்வமானது ஏற்படுகிறது; ஸாக்ஷாத் தாக வன்றே. அந்த த்வாரம் விசேஷணங்களே யாகையால் அவற்றுக்குக் கார்யத்வ மில்லையாகில் விசிஷ்டத்திற்கும் அது ஸித்தியாது. ஸ்தூல பரிணாம மாகிய கார்யத்வமானது ப்ரபஞ்ச மொன்றுக்கே ஸாக்ஷாத்தாக உள்ளது. ப்ரஹ்மத்திற்கோ அது பரம்பரா க்ரமத்தினாலேயே ஏற்படுகின்றது. முதலில் ப்ரபஞ்சத்திற்குக் கார்யத்வம் புத்திஸ்தமான பிறகே அதை த்வாரமாக்கி ப்ரஹ்மத்திற்கும் கார்யத்வத்தை நிரூபிக்கவேண்டும். விசேஷணங்களைத் தவிர்த்து விசிஷ்டத்திற்குத் தனித்து உபாதேயத்வம் நிரூபிக்க முடியாதே. ஆகவே த்வாரபூதமான விசேஷணமும் உபாதேயமே யாகையால், இது ஸ்வோ பாதாந காரண பூதமான ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட் டிருப்பதால், 'கூஸிந்யொஸெவொவாஷெயஹாவநியஃ' என்று நினைப்பதற்கில்லை.

4. மேலும்: விசிஷ்ட ஸ்தலத்தில் விசேஷ்யம் அந்வயம் பெறு மிடத்தில் விசேஷணமும் ஏகரூபமாக ஸம்பந்தம் பெறவேண்டும் என்பதாக ஒரு நியதி யுண்டு. இதை ஜந்மாத்யதிகரண ச்ருதப்ரகாசிகையிற் காணலாம். ப்ரக்ருதத் தில் விசிஷ்டம் கார்யம் என்பதனால் விசேஷ்யாந்வயியான கார்யத்வமானது விசேஷணாந்வயமும் பெறுகிறது. விதேயமான கார்யத்வத்தோடு விசேஷணம் ஸம்பந்தம் பெறாவிடில் அது விசேஷண மன்று; உபலக்ஷணமே. ஸித்தாந்தத்தில் விசிஷ்டம் கார்யமேயன்றி உபலக்ஷிதம் கார்ய மன்றாகையால், விசேஷணாம்சத் திற்கும் கார்யத்வம் நிலைநின்றது.

5. ஆனால் விசேஷணாம்சமானது கார்யமே யென்று கொண்டாலும், 'இது காரணமாகிய ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டத்தில் வடகமாகிய விசேஷணாம் சத்திற்கு மட்டில் கார்ய மாகின்றதா? அல்லது விசேஷ்யமாகிய ப்ரஹ்மத்திற் கும் கார்ய பூதமா?' என்கிற விஷயம் ப்ரக்ருதத்தில் மிகவும் முக்யமானது. விசேஷ்யாம்சமாகிய ப்ரஹ்மத்துக்கும் ஸ்தூல சேதநா சேதந ஸமுதாயமானது கார்ய மாகின்றது என்பதாகவே ஸ்ரீ பாஷ்யகாராதி ஸித்தாந்தம் என்று தேறி விடு மானால் உபநிஷத் பாஷ்யகாரர் அருளிய

' நஹ்யஸிந்யொஸெவொவாஃாெநாவாஷெய ஹாவஜ தி நியஃ '

என்பதே ஸித்தாந்த மாகிறது. உபாதாந மாகிய ப்ரஹ்மமும் உபாதேய மாகிய ஸ்தூல சேதநாசேதந வர்க்கமும் ஸ்வரூபத: பிந்நமே யன்றோ? இது விஷயத்தில் பூர்வாசார்யர் நிஷ்கர்ஷம் செய்திருப்பதை ஸஹ்ருதயர் கவனிக்க வேண்டும். ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் ச்ருதி ப்ரக்ரியையில்,

' கூஜ ஸ்லஸூஜ ஒெதாஙஹகாய தயா, தஃ ஷய ஃாஉிக தயாஅ தஃா க

கஙெவொெநகூாகூ '

என்பதாக ஸ்ரீ பாஷ்ய பங்க்தி யுள்ளது. இதற்கு ச்ருதப்ரகாசிகையில் அருளிய விவரணமாவது:—

"கூருத்ஸ்நஸ்ய ஜகத உத்பத்தி நிஷ்க்ருஷ்டஸத்வ: ப்ரஹ்மஸ்வரூபமபி விஶேஷ்ய ஶரீரிபர: காயத்வாவஸ்தாம் ப்ராப்தஸ்யாபி காரணத்வ, ஸ்வயாதகத்வம் ச ஸாக்ஷாதா பரம்பர யாவா உபாதானமேவ ஸுஸ்தூலப்ரஹ்மகாயத்வம் ஜகத"

விசேஷணும்சமாகிய ஸ்தூல சேதநாசேதந ப்ரபஞ்சத்திற்கு விசேஷ்யாம்ச மாகிய ப்ரஹ்மஸ்வரூபம் உபாதாநகாரண மாகின்றது என்பதை இங்கு ஸயுக்திக மாக்கினுர் ச்ருதப்ரகாசிகாசார்யர். உபநிஷத் பாஷ்யகாரரும், 'நஹ்யுபாதான் யோரேவ' இத்யாதி அருளியிருப்பதற்குத் தாமே இந்த ச்ருதப்ரகாசிகா ஸ்ரீ ஸூக்தியையும் ப்ரமாணமாகக் காட்டியிருக்கிருர். ஆகவே ஸ்ரீ பாஷ்ய ச்ருதப்ரகாசிகா ஸூக்தி ஸம்மதமே இவ்வநியமம் என்பது தெளிவாகின்றது.

6. சததூஷணி 53-வது வாதத்தில் ஸுஸ்பஷ்டமாகவே விசேஷ்யாம்சமும் உபாதாந மென்பதை

"யத்து விஶிஷ்டவக்ஷேத்ரீ ப்ராதுர்பாவவிஶேஷண விஶேஷணஸ்யை வோபாதாநத்வமதமபி, தத்ர விஶேஷணஸ்ய ஸாக்ஷாதிகாரணம் ப்ரயுக்த ப்ரஸங்கம்: விஶேஷ்யஸ்யாபி பரம்பரயா ப்ரயுக்தவ்யப்ரயுக்தத்வ விஶேஷாத உபாதாநத்வப்ரஸ்பஷ்டம் நிக்ஷேபம்:"

என்று ஸ்ரீ ஸ்வாமி அநுக்ரஹித்திருக்கிருர். விசேஷணும்சத்தைப் பற்றிக் காரண வடிகமான விசேஷணும்சமானது உபாதாநமாவதுபோல் விசேஷ்யாம்சமும் உபாதாநமே என்பதாக அருளுவதால் 'நஹ்யுபாதான்யோரேவ.........நியம:' என்பதே ஸ்ரீ தேசிகாசயமும் என்பது தெளிவாகின்றது.

7. சாரீரக த்விதீயாத்யாயத்தில் விலக்ஷணத்வாதிகரணத்தின் பூர்வபக்ஷமும் ஸித்தாந்தமும் ப்ரக்ருத விஷயத்தில் தெளிவு பிறப்பிப்பவை. விசிஷ்டங்களுக்கு உபாதாநோபாதேய பாவம் கொள்ளில், காரணத்தில் விசேஷ்யாம்ஶமான ப்ரஹ்மம் ஸ்தூல சேதநாசேதநங்களாகிய விசேஷணும்சங்களுக்கும் உபாதாந காரண மாகிறது. 'இவை யிரண்டும் அத்யந்த விலக்ஷணங்களாயிற்றே; ஆகவே இவைகளுக்கு உபாதாநோபாதேய பாவம் எப்படி?' என்பதாகப் பூர்வபக்ஷம். "பாதகமில்லை; விலக்ஷணங்களுக்கும் உபாதாநோபாதேயத்வ முண்டு" என்பதாக அங்கு ஸித்தாந்தம். உபாதாநோபாதேய ஸ்வரூப பேதத்தை இசைந்து செய்த பூர்வபக்ஷத்தை அப்யுபகம் செய்தே ஸித்தாந்தம் செய்திருப்பதால், பிந்நங்களுக்கும் அது சேரும் என்பது கையிற் கனிபோன்றதாகிறது. இவ்வதிகரண நயமயூகமாலிகையில் அப்பைய தீக்ஷிதர் சொல்லியிருப்பது அநுஸந்தேயம்.

"காரணபூத விஶேஷ்யாம்ஶஸ்ய காயபூதவிஶேஷணாம்ஶேப்விகாரணத்வம் வக்தவ்ய மித்ய ஸ்யுபவேதத்யவைலக்ஷண்யம், தத்ரோபஷ்டம்ப உபந்யஸ்த: । வாயுத்ராவஸ்தாஸ்ய யளவநாத்யவஸ்தாஸ்வாவஸ்தாவபி ஹி காரணபூத விஶேஷ்யாம்

ஸர்வ கார்யகத விசேஷணாம்சேऽபி காரணத்வம்? । நிர்ஹேதுகஸ்ருஷ்டிவாத யளவநாதிப்ராப்த்யாபாதக । ததோ ஹி விலக்ஷணத்வே விசேஷ்யே காரணத்வ உபபத்ய தஜ்ஜ திகரணம் ஸமர்த்திதம்’’

என்பதாக விசேஷணாம்சத்திற்கும் விசேஷ்யாம்சத்திற்கும் உபாதானோபாதேய பாவ ஸமர்த்தனமே விலக்ஷணத்வாதிகரண ஸித்தாந்த க்ருத்யமாக அவர் சொன்னார். இவ்வாறாகவே ஸித்தாந்த ஸித்தாஞ்ஜனத்திலே அனந்தாசார்யரும் நிஷ்கர்ஷித்திருக்கிறார்.

‘நவிலக்ஷணத்வாதிகரணம் விசேஷண விசேஷ்யயோ
ரூபாதானோபாதேயபாவபரம்’

என்பதாக அவர் பணிதி. ஆக இவ்வாறாக: பின்னங்களான விசேஷ்ய விசேஷணாம்சங்களுக்கும் உபாதானோபாதேயபாவம் விலக்ஷணத்வாதிகரண ஸித்தாந்தித மாகையால் ‘நஹ்யத்ர பின்னயோரேவ...... நியம:’ என்று உபநிஷத் பாஷ்யகார ஸூக்தியானது மிகவும் ஸாமஞ்ஜஸ்யமே என்று கொள்ள வேண்டும்.

8. லோகத்திலும் ஆத்மதர்மபூத ஜ்ஞானாதிகளுக்கு ஆச்ரயமான ஆத்மாவானது உபாதானகாரண மாகிறது. ஜ்ஞான ஸ்வரூபம் நித்யமேயாகிலும், அதற்கு ஸங்கோச விகாஸ ரூபாவஸ்தாந்தரங்களையிட்டு ஜ்ஞானம் உண்டாகிறதாக வ்யபதேசம். ஆகவே: ஆத்மாவிற்கும் தர்மபூத ஜ்ஞானாதிகளுக்குமுள்ள உபாதானோபாதேய பாவமானது பின்ன த்ரவ்யங்களுக்கும் அது உண்டென்று உபநிஷத் பாஷ்ய நிஷ்கர்ஷத்தை த்ருடீகாரம் செய்கிறது. ‘ஸ்வஜ்ஞானாச்ரயம் ஸ்வஜன்யம் பவதி’ என்று ஸ்ரீ தேசிகன் ஸாராவளி ஸ்ரீ ஸூக்தியு மிங்கு அநுஸந்தேயம்.

9. ஸ்ரீ பாஷ்யகாரர் ‘ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டம் ப்ரஹ்மைவ காரணம் கார்யம் சேதி ப்ரஹ்மோபாதானம் ஜகத்’, என்றும், ஸ்ரீ தேசிகன், ‘ஜகத்ப்ரஹ்மணோ ஸ்ஸூக்ஷ்மாவஸ்தாதத்த்வஸ்தைகவிசிஷ்டவேஷண கார்யகாரணயோரைக்யே ஸதி ஜகத்ப்ரஹ்மோபாதானத்வம் யுஜ்யதே’, என்றும் த்ரவ்யைக்யத்தை ஆதாரமாகக் கொண்டிருக்க ‘நஹ்யத்ர பின்னயோரேவோபாதானோபாதேயபாவ இதி நியம:’ என்பதாக உபநிஷத் பாஷ்யகாரர் ஸாதிப்பது அந்தப் பூர்வாசார்ய ஸூக்திகளுக்கு விருத்த மன்றோ? என்பதாக ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி ப்ரச்னம் பண்ணுகிறார். த்ரவ்யைக்ய மென்பது கார்யகாரணத் த்ரவ்ய ஸ்வரூபங்கள் இரண்டும் ஒன்றாக இருப்பதேயன்றி வேறன்று என்பதான ஆசயத்தினால் இந்தக் கேள்விக்கு அவகாசம் ஏற்பட்டது. நமது ஸித்தாந்தத்தில் ஐக்யம் என்பது இரண்டு விதமானது. ஸ்வரூபங்களுக்குப் பரஸ்பரம் அபேதரூப மொன்று; விசிஷ்டத்தில் விசேஷணாம்சமாய் நிற்கையாகிற ஐக்யம் மற்றொன்று.

‘ஸூக்ஷ்மஸ்தூலஜகதோ ப்ரஹ்மகார்யதயா தத்ஸ்யாத்மிகதயா அதஸ்தத்ஸ்வரூபைக்ய
தேனைக்யாத்’

என்கிற ஜிஜ்ஞாஸாதிகரண ஸ்ரீ பாஷ்ய ஸூக்தியில் இவ்விரண்டு விதங்களான ஐக்யமும் கண்டோக்தமா யுள்ளது. இதில் ‘ஜகத்’ சப்தமானது விசேஷணும் சத்தை மாத்ரம் போதிக்கின்றது. தச் சப்தங்கள் இரண்டும் விசேஷ்யாம்ச மான ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே காட்டுகிறது. இரண்டுக்கும் விசிஷ்டம் பொரு ளன்று. விசிஷ்டத்திற்கு விஶிஷ்டம் அந்தர்யாமி யாகாது. விஶேஷணாம் ஶத்திற்கு விசேஷ்யம்ச மாத்ரமே ஆத்மா. நிஷ்க்ருஷ்ட ப்ரபஞ்ச மானது ப்ரஹ்மாத்மக மாகையால் ப்ரஹ்மத்தோடு ஐக்யம் பெற்றது என்று ஸ்ரீ பாஷ்யம். ஸ்வரூபைக்ய மிவற்றுக்கு இல்லை. விசிஷ்டாந்தர்ப்பாவ ரூபமான மற்றொரு ஐக்யமே யுள்ளது. இங்கு ச்ருதப்ரகாசிகா ஸ்ரீ ஸூக்திகளாவன :—

‘ஜகத: த்ரிநிஷ்க்ருஷ்டஸ்வரூபஸ்வபாவ விஶேஷ்யாம்சஸ்வத:.... ததாத்மகத்வம் நாம ஜகத்ஸ்ரஷ்டுரேகாத்மாவத்யா ப்ரயோஜகத்வம் நாஹாவாஸ ததா ஐக்யதத்வம் தேந ப்ரகாரேணைக்யம் ந த்வ ஸ்வரூபைக்யம் விஶிஷ்டாந்தர்பாவேணைக்யத்யோ:, தத்த்வமஸி நாநாத்வமிதி விஹிதோபயவிதைக்யம், ப்ருதக்நீக நாநாத்வம் நிஷித்யத இத்யர்த:’’

என்று அம்சாதிகரணத்திலே சேதநங்களுக்கும், அஹிகுண்டலாதிகரணத்திலே அசேதநங்களுக்கும், ஸூத்ரகாரர் தாமே விசிஷ்டாந்தர்பாவரூபமான ஐக்ய ப்ரஹ்மத்தோடு கண்டரவேண ஸமர்த்தநம் செய்துள்ளார். ‘அம்சோ நாநாவ்யபதேசாத்’ என்றும் ‘உபயவ்யபதேசாத்’ என்றும் அவ்வதிகரண ஸூத்ரங்கள் இங்கு அநுஸந்தேயங்கள்; ப்ரஹ்மத்தோடு சேதநங்களுக்கு ஐக்ய வ்யபதேசமும் ச்ருதியி லுள்ளது. அந்த வ்யபதேசமும் முக்யமாகவேண்டும். ஆகவே ப்ரஹ்ம மீமாம்ஸமிவை. அசித்துக்களும்சேதநங்கள்போலவே ப்ரஹ்மாம் சங்கள். ‘விஶிஷ்டவஸ்த்வேகதேசத்வேந அபேதவ்யவஹாரோ முக்ய:’ என்பதாக அவ் விரண்டு அதிகரணங்களிலும் ஸித்தாந்தத்திலே ஸ்ரீ பாஷ்ய ஸூக்தி யுள்ளது. ஆகவே விசிஷ்டங்களுக்கும் பரஸ்பரம் ஸ்ரூபைக்ய ரூபமான த்ரவ்யைக்யம் விசேஷணம்சங்களுக்கு விசேஷ்யாம்சமான ப்ரஹ்மத்தோடு விசிஷ்டாந்தர்ப் பாவம், விசேணஷத்வம், அம்சத்வம், அப்ருதக்ஸித்தி என்று சொல்லப்படும் த்ரவ் யைக்யம். ஆகவே விசேஷணம்ஸங்களுக்கும் கார்யத்வ முண்டு என்கிற ஸித் தாந்தத்தில் த்ரவ்யைக்யத்திற்கு யாதொரு ஹாநியு மில்லை. விசிஷ்டமே கார்யம் என்கிற இடமெங்கும் விசேஷணமும் கார்யமே என்பது விவக்ஷிதம்தான். ‘அசேஷம் ஸவஸ்து ஸவிகாரம் நாமவத்’ என்று வியததிகரண ஸித்தாந்த ஸூத் ரம். ப்ரஹ்மவ்யதிரித்த சேதநாசேதநாத்மக ஸர்வ வஸ்துவும் கார்யபூதமே யன்றி அநுத்பத்தி அதற்குக் கிடையாது என்று ஸ்ரீ பாஷ்யம். விசிஷ்டமே கார்யமும் காரணமும் என்று ப்ரக்ருதம் ஸம்பாதக ஸ்வாமி உதாஹரித்துள்ள ஸ்ரீ பாஷ்ய காராதி ஸூக்திகளில் விசேஷங்களுக்கும் கார்யத்வம் இஷ்டம் தான். அவைக ளுக்கு ப்ரஹ்மத்தோடு ஸ்வரூபைக்ய ரூபமான த்ரவ்யைக்ய மில்லாவிடினும் விசிஷ்டாந்தபாவ ரூபமான மற்றொரு த்ரவ்யைக்ய முண்டு.

10. ஆகையால் ‘நஹ்யபிந்நயோ: உபாதாநோபாதேயபாவ: உபபத்யதே’ இதி ப:, என்பதாக ஸ்வரூபைக்யமாகிற அபேத மிருக்குமவற்றுக்கே உபாதாநோபா

தெயபாவம் என்கிற நியமமில்லை என்று முண்டகோபநிஷத்தில் நிஷ்கர்ஷம் செய்தருளியதே ஸ்ரீ பாஷ்யகாரர் ச்ருதப்ரகாசிகாசார்யர் ஸ்ரீ தேசிகன். இவர்களுடைய ஸித்தாந்த மென்றும், ஸ்வரூபாபேத மிருந்தால்தான் உபாதானோபாதேயபாவ முண்டு. விசேஷணங்களுக்கு விசேஷ்யத்தைப்பற்றி அது கிடையாது என்கிற வாதம் ஸித்தாந்த ஸம்மதமன்று என்றும் தெளிவாகின்றது. தடஸ்தராகிய மதாந்தரஸ்த தீக்ஷிதரும் நயமயூக மாலிகையில் விசேஷணங்களுக்கும் விசேஷ்யத்திற்கும் உபாதேயோபாதாந பாவம் ஆவச்யக மென்று ஸித்தாந்தம் செய்தார். ‘ஜக்ஷணாயஃஹூ உயா ந-ஸாரிணீமிவஂதெ நயஉய-ஔவஊாஜிகா’ என்பதாக அவர் ப்ரதிஜ்ஞை. ஸித்தாந்த ஸித்தாஞ்நத்திலே வித்வந்மணியான அநந்தாசார்யர் இவ்வாறாகவே நிஷ்கர்ஷம் செய்தார். ந்யாயஸித்தாஞ்ஜந வ்யாக்யாந ரத்நபேடிகையிலே திருப்புட்குழி ஸ்வாமியும் இப்படியே ஸித்தாந்தம் செய்தார். ஈச்வர பரிச்சேதத்திலே காண்க.

‘தாஉா.கூ - சுவரய க்ஷிகி, சுநூதரஸஂஸெநூந காயஉஂவூதி, தாஉாகூஸஂபஸெஊந காரணகுவஉ-வாஉா ந காரணகுவகி,’

என்பதாக இவர்கள் ஏக கண்டராய்நிஷ்கர்ஷம் செய்தார்கள். ‘நஹூஹிந ......நியஉஃ’ என்கிற உபநிஷத்பாஷ்ய நிஷ்கர்ஷத்திற்கு உள்ள ஸதாசார்ய ஸூக்திஸௌஹார்த்தத்தை இவ்வாறு விஜ்ஞாபநம் பண்ணிக் கொண்டேன். ஸஹூஉயாஃ வூஉாணழ.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸர்வஜித் ௵ தை (மகர) மீ

[உத்தராயணம்]

14-1-48.	1உ புதன்கிழமை	...	சாப சுக்ல த்ருதீயை திதி : மகர ரவி 19-49 : ஸங்க்ராந்திப் பண்டிகை : திருப்பாவை சாத்துமறை
15-1-48.	2உ வியாழக்கிழமை	...	மகர சுக்ல சதுர்த்தி திதி [கனு]
22-1-48.	9உ வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
24-1-48.	11உ சனிக்கிழமை	...	ஸ்ரீ. அ. மடம் 38-ம் பட்டம் திருக்குடந்தை ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
25-1-48.	12உ ஞாயிற்றுக்கிழமை	...	சதுர்த்தசி – பூர்ணிமா திதி த்வயம்
26-1-48.	13உ திங்கட்கிழமை	...	மகர க்ருஷ்ண ப்ரதமை திதி : தைப் பூசம்
28-1-48.	15உ புதன்கிழமை	...	ஸ்ரீ திருமழிசைப்பிரான் திருநக்ஷத்ரம்
5—2-48.	23உ வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
8—2-48.	26உ ஞாயிற்றுக்கிழமை	...	ஸ்ரீ அ. மடம் 42-ம் பட்டம் இஞ்சிமேடு ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திரு நக்ஷத்ரம்
9—2-48.	27உ திங்கட்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை [மஹோதய புண்ய காலம்.
10-2-48.	28உ செவ்வாய்க்கிழமை	...	மகர சுக்ல ப்ரதம திதி
11-2-48.	29உ புதன்கிழமை	...	மகர சுக்ல த்விதீயை திதி
12-2-48.	30உ வியாழக்கிழமை	...	மகர சுக்ல த்ருதீயை திதி : கும்பரவி 47-5 [மறு திநம் கும்ப ஸங்க்ரமண தர்ப்பணம்]

ஸ்ரீ:

செய்திகள்

1

ஹிந்து மதமும் பண்பாடும்

[Hindu Religion & Culture]

புத்தகம் எழுதுவோருக்குப் பரிசு

ஹிந்து மதத்திலும் பண்பாட்டிலும் நம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் ச்ரத்தையுண்டாக்கத் தக்க புத்தகம் ஒன்று தமிழில் எழுதுபவருக்கு ரூ. 1000 பரிசு அளிக்கப் பெறும். புத்தகம், 12 பிராயம் முதல் 16 பிராயத்துக்குள் உள்ள பையன்களும் பெண்களும் படிக்கத்தக்கதாய் இருக்க வேண்டும். காகிதத்தில் ஒரு பக்கமே எழுதப்படலாகும். அச்சடித்த புத்தகம் டெம்மி ஆக்டெவோ அளவில் 128 பக்கங்களில் வரும்படியாக எழுதப் பட வேண்டும்.

1948 அக்டோபர் மீ 1வ க்குள் அடியில் கையொப்பமிட்டவரிடம் வந்து சேரும்படி நூலில் இரண்டு கையெழுத்துப் பிரதிகள் அனுப்பப்படவேண்டும். கீழே காணப்படும் கனவான்கள் அடங்கிய கழக மொன்று கிடைத்த பிரதிகளைப் பரீசிலனை செய்யும்.

1. ஸர். எஸ். வரதாசாரியர்
2. திவான் பகதூர் கே. சுந்தரம் செட்டியார்
3. ஸ்ரீ. கே. பாலசுப்ரமணிய முதலியார்
4. ஸ்ரீ. ஸி. கே. சுப்ரமணிய முதலியார்
5. டாக்டர் வி. ராகவன்

பரிசளிப்பதைப் பற்றிய கழகத்தின் தேர்தல், கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் அநுமதிக் குட்படும். அதுவே முடிவாகும். பரிசுக்குரிய கையெழுத்துப் பிரதி கீழே கையொப்ப மிட்டவர்க்கே சொந்தமாகும். அதனையும் அதன் மொழி பெயர்ப்புக்களையும் அச்சிட்டு ப்ரசுரிக்கும் உரிமை அவருக்கே உண்டு. ஒப்புக்கொள்ளப்படாத பிரதிகள் உரியவர்களுக்கு திருப்பி யனுப்பப்படும். ஆனால் அவற்றுள் எவற்றையேனும் கீழே கையொப்ப மிட்டவர் ஆசிரியர்களிடமிருந்து விலைகொடுத்து வாங்கிக்கொள்ளலாம்.

"அம்ருத விலாஸம்"
சென்னை 10
14—11—47.

எம். சுப்பிரமணியன்
[ரிடயர்டு அக்கௌண்டண்ட் ஜெனரல்]

2

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நிகழும் ஸர்வஜித்ஸு கார்த்திகைமீ 14வ (29—11—47) ம்ருகசீர்ஷ நக்ஷத்ரத்தில் ஸ்ரீமத் வேதமார்க்கப்ரதிஷ்டாபக பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யேத்யாதியாய்

எழுந்தருளியிருக்கும் தில்லஸ்தாநம் ஸ்ரீ ஶடகோபராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகனுடைய 76-வது வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் தில்லஸ்தாநத்துக் கடுத்ததும், மழிசை வந்த சோதியான் ஸ்ரீ பக்த ஸாரரால் பக்த பராதீநதையை ப்ரகாஶிப்பித்தருளினதுமான பெரும்புலியூர் ஸ்ரீ ஸௌந்தரராஜப்பெருமாள் திருவடிவாரத்தில் ஸ்ரீ ஸ்வாமியினால் பூர்வம் நிர்மிதமான ஆச்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமியின் பக்தர்களால் விமர்ஸையாய்க் கொண்டாடப்பட்டது. ஸதராங்கங்களுடன் விசேஷ ததீயாராதநமும் தாம்பூல விநியோகத்துடனும் உத்ஸவம் பூர்த்தி யடைந்தது. உத்ஸவத்துக்குத் தில்லஸ்தாநம், கல்யாணபுரம் ராயம்பேட்டை முதலிய ஸ்ரீ க்ராமங்களிலிருந்து ஸ்வாமிகள் அநேகர் எழுந்தருளி அந்வயித்தனர்.

T. S. சேஷாத்ரி தாஸன்

3

சென்னை ஸர்க்காருக்குக் கல்கத்தா ப்ரமுகர்களின் அவஸரத் தந்தி.

சென்னை கனம் ப்ரதம மந்திரி அவர்கட்கும் கவர்னர் ஜெனரல் அவர்கட்கும், ஸ்ரீ ஸர்தார் படேல் அவர்கட்கும், கல்கத்தா ப்ரமுகர்களான கன தநவான்கள் அடங்கிய ஸபையார், ஹிந்து தர்ம நிதி நிர்வாஹச் சீர்திருத்த மசோதா நிறுத்த ஸம்பந்தமாகப் பின் வரும் அவஸரத் தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்கள். அது வருமாறு:—

''சட்ட ஸபையில் ப்ரேரேபிக்கப்பட இருக்கும் ஹிந்து தர்ம நிதி பரிபாலந சீர்திருத்த மசோதா, கருத்தில் மதவிரோதமானது; ஹிந்து மதாசார்யர்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மதக் கொள்கைகளையும் ஸம்ப்ரதாயங்களையும் அடியோடு வேரறுக்கும் கொள்கையை யுடையது. மடங்கள், ஶிஷ்ய கோடிகளின் தர்ம நன்கொடைகளாலும் ஸம்பாவனைகளாலும் நிறுவப்பெற்றுத் தொன்று தொட்டு வெகு காலமாக நிர்வஹிக்கப்பட்டு வருபவை. மடங்களின் நிர்வாஹத்துக்குக் கமிஷனர் நியமிப்பது, அவருடைய ஸ்வேச்சா ஸர்வாதிகாரத்தில் முடிவடைவதாயிருப்பதோடு, நாளடைவில் மத ஸம்ப்ரதாயங்களின் ப்ரசாரத்திற் கென்று ஏற்பட்டுள்ள மடங்களின் நாஶத்துக்கும் காரணமாகும். ஆதலின் மேற்கூறிய மசோதா ஸம்பந்தமான நடவடிக்கை ஒன்றும் மேற்கொண்டு எடுத்துக் கொள்ளாமலிருக்கும்படி சென்னை ஸர்க்காரை மிக்க ஆதுரத்துடன் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறோம்.''

4

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

ஷை ஸபையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா 16—11—47 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. குத்தாலம் போர்ட் ஹைஸ்கூல் தமிழ் வித்வான் ஸ்ரீ க்ருஷ்ணைசார் அவர்கள் ஸபைக்குத் தலைமை வஹித்தார். அவ்வமயம் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியதர்சி ஸ்ரீ. P. R. திருமலை ஐயங்கார் ஸ்வாமி தாம் இயற்றியுள்ள 'அந்தணர்' என்னும் ஷை சங்க வெளியீட்டை அரங்கேற்றி விரிவான் உபந்யாஸம் செய்தார்.

ஸபையின் மூன்றாவது ஆண்டு ஆரம்ப விழா 17-11-1947 திங்கட்கிழமையன்று இந்த ஸபையின் ஸ்தாபகரும் போஷகருமான மதுரை மஹா வித்வான் தார்மிக ரத்ந ப்ரதீப ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், B.A., B.L., அட்வெகேட்

அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்னாருக்கும் மற்றைத் தலைவர்களுக்கும் ஸ்ரீ ஆமருவியப்பன் ஸந்நிதியில் தேவஸ்தான மரியாதைகள் செய்யப்பட்டு, பாராயணத்துடன் வீதி ப்ரதக்ஷிணமாக ஸ்ரீ அஹோபில மடத்தில் வந்தனர். காலை 9-மணிக்கு விழா ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அக்ராஸநர் அவர்கட்கு ஸபையோரால் வரவேற்பிதழ் ஒன்று படித்து ஸமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் தலைவர் அவர்கள், 'கண்ணன் எங்கே?' என்பது பற்றி இனிமையான உபந்யாஸம் செய்தருளினர். பின்னர் பாராயணம் செய்யும் சிறுவர்கள் பரீக்ஷிக்கப்பட்டு, அவர்கட்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

ஸபையின் அத்யக்ஷகர் ஸ்ரீமான் T. S. ஸுந்தரம் ஐயங்கார், (B.A., L.T.,) அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு விசேஷ திருமஞ்ஜனத்துடன் ஸபை இனிது முடிந்தது.

கும்பகோணம் ஸ்ரீ. V. R. விஜயராகவாசார்யர் அவர்களால், ஸபையின் ஸ்தாபகர் ஸ்ரீ. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களின் உருவப்படத் திறப்பு விழா நடத்தப்பட்டது. இவ்விழாவின் வெற்றிக்காக ஸ்ரீ அஹோபில மடம், ஜகத்குரு ஶங்கராசார்யர், இன்னும் அநேக வெளியூர் ஸ்வாமிகள், ஆகிய இன்னோர் அன்புடன் அனுப்பிய ஆசிச் செய்திகள் ஸதஸ்ஸில் படிக்கப்பட்டன.

* * * *

திருக்குடந்தை, ஐயங்கார் தெரு, வித்வான், ஆசுகவி, ஸ்ரீ. உப. ந. வே. ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி ஷி ஸபைக்கு அனுப்பிய ஆசிச் செய்தி

ஸஹஸ நாஉ ஸஹா ஸுஶஙகா நமெநாவா
ஸஹ ஸஹொ ஸிரெஉஷஸஹா திஉஂ ஜஹெவ நழ ।
ஸஹஸ ஶீஷஶாயினா உ௯ஂ விவயயஞஸள
ஸஹஸ ஹா நா ஸஉஂ ஸஜெய தாஂ யஶா தமெ ॥ 1.
ஸவஜிதி ஸவஜெ ஶ்ரீ ஸாஂ வூ தஜெஷா யதஸூஹாஂ தத்தா ।
ஸுநஹவதி ஹவ்யூஜெவஂ உஹொ தவஂ வ்ரஸ்லிகெ உஶஷெ ॥ 2.
வ்ரஸ்லிகவஜ்ஞெ விஷஉதி உ.ரஷஂ வ்ரஸ்லிகவஉநெ கிஞ ஸஉஹாவி ।
வ்ரஸ்லிகவஉநெ விஹஶஞ்ஞெஷா வஷதி விபஹயா ஜொஉழ ॥ 3. ॥
ஶ்ரீவாவஸி நஶகஉஉந கஉநஞா
வெயஂ ஸஜெதி நியதஂ கவியிவிதகஃ ।
யஸஂ ஸஹா நஉஹி யாஉகஸ தஉஜா
ஶதவூஶீவ உதி கொவி விஹாதி கஷ்ஷ ॥ 4. ॥
ஜயது ஜயது ஹஶஉவ ஸாஶொக ஹஶஉஃ
ஜயது ஜயது தஸஂ உஜ்ஜி தஸநாவஃ ।
ஜயது ஜயது தஸஂ விஷ்ணு நாஉ ஸஹெயஂ
ஜயது ஜயது தஸஉஉஸவஸ்ஜநா நாஉ ॥ 5. ॥

மதுராந்தகம் ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபையாரது வாழ்த்துச் செய்தி

[illegible]

5

ஒரு திருத்தம்

சென்ற ஸஞ்சிகையில் 255-ம் பக்கத்தில் 'ஆலய ப்ரவேசம்' என்னும் விஷயத்தில், '[illegible]' என்பதற்கு 'ஒரு ஸ்த்ரீ பாதி கிழவியும் பாதி குமரியும்' என்று உரை எழுதப்பட்டுள்ளது. இது மொத்த தாத்பர்ய மானாலும், "[illegible]" என்பதே அதன் பொருளாகும்.

V. ஸ்ரீநிவாஸையங்கார்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

உபாதாந உபாதேய பாவம்

சென்ற ஸஞ்சிகையில் ப்ரஹ்மத்திற்கும் ப்ரபஞ்சத்திற்கு முள்ள உபாதாநோபாதேய பாவத்தைப் பற்றி ப்ரஸ்தாவித்து அதில் ஒரு ஸந்தேஹத்தை நாம் விவரித்திருந்தோம். அந்த ஸந்தேஹத்திற்கு ஒரு ஸமாதாநத்தை வித்வான் ஸ்ரீ. உப. தி. ஈ. மதுராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வாமி தெளிவாகவும் விஸ்தாரமாகவும் அநுக்ரஹித்திருக்கிருர். அதை மற்ருரிடத்தில் ப்ரசுரம் செய்திருக்கிருேம். அது அநேக அம்ஶங்களில் த்ருப்திகரமாக இருக்கையிலும், இரண்டொரு அம்ஶங்களில் அடியேனுடைய ஸம்ஶயத்தைப் பூர்ணமாக நிவர்த்திக்கவில்லை. அவைகளை மாத்ரம் மறுபடியும் இவ்விடத்தில் விண்ணப்பித்துக்கொள்ளத் துணிகின்றேன்.

அடியேனுடைய ஸந்தேஹமாவது:— ஒரு வஸ்து உபாதாந காரணமாகவும் மற்ருென்று அதன் உபாதேய மாகவும் இருப்பதற்கு அந்த இரண்டும் ஒரே த்ரவ்யமாக இருத்தல் வேண்டுமென்று ஒரு நியமம் உண்டன்ருே? லோகத்தில் குடத்திற்கு மண் கட்டியை உபாதாந காரணமாக நாம் சொல்லுகிருேம். அவை இரண்டும் ஒரே த்ரவ்யங்களாக இருப்பதே அப்படிச் சொல்வதற்குக் காரணம். அம்மாதிரியே ப்ரஹ்மமும் ப்ரபஞ்சமும் ஒரே த்ரவ்யமாக இருந்தாலன்ருே அவைகளை உபாதாந உபாதேயங்களென்று வ்யவஹரிக்கக்கூடும்! அவை இரண்டும் ஒரே த்ரவ்யமன்றே. ப்ரஹ்மம் ஸர்வஜ்ஞம், நிர்விகாரம்; ஜகத்திலுள்ள சேதநாம்ஶம் அஸர்வஜ்ஞம், துக்கி; அதிலுள்ள அசேதநாம்ஶம் ஜடம். ஆகையால் அவைகளுக்கு உபாதாநோபாதேயத்வம் ஸம்பவிக்கமாட்டாதே என்று ஸந்தேஹம் ஜநிக்க, நமது ஆசார்யர்கள் ச்ருதி பலத்தைக்கொண்டு அவைகளுக்கு அந்த ஸம்பந்தத்தை ஸமர்த்திக்கிருர்கள். 'ப்ரஹ்மம் அறியப்பட்டால் ப்ரபஞ்சம் அறியப்பட்டதாகிவிடும்' என்று ச்ருதி சொல்லுகின்றது.

அப்படிச் சொல்வதால் ப்ரபஞ்சத்திற்கு ப்ரஹ்மம் உபாதாந காரணமாக இருத்தல் வேண்டுமென்பது ச்ருதியின் கருத்து என்று விளங்குகின்றதன்றோ? அப்படி இராவிட்டால் ஒன்றின் ஜ்ஞாநத்தால் மற்றொன்று ஜ்ஞாத மாகாதன்றோ? இம்மாதிரி ச்ருதி வாக்யங்கள் பல விருக்கின்றன. அவைகளை ஆதாரமாகக் கொண்டு ப்ரஹ்மத்திற்கும் ப்ரபஞ்சத்திற்கும் த்ரவ்யைக்யத்தை ஸமர்த்தித்து அதுவழியாக அவைகளுக்குப் பரஸ்பரம் உபாதாந உபாதேய பாவத்தைப் பூர்வாசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரரோ, தமது உபநிஷத் பாஷ்யத்தில் 'ஒன்று உபாதாநமாகவும் மற்றொன்று உபாதேயமாகவும் இருப்பது அவை இரண்டும் ஒரே த்ரவ்யமாக இருப்பதைச் சார்ந்ததில்லை; பிந்ந பிந்நங்களான த்ரவ்யங்களும் உபாதாந உபாதேயங்களாக இருத்தல் கூடும்' என்று அநுக்ரஹித்திருக்கிறார். அது எப்படி என்பதுதான் அடியேனுடைய ஸந்தேஹம். இதைத்தான் வெளியிட்டு இதற்கு ஸமாதாநத்தை வித்வான்களிடமிருந்து ப்ரார்த்தித்திருந்தோம்.

இதற்குப் பல ப்ரகாரமாக ஸ்ரீ. உப. வீரராகவாசார்ய ஸ்வாமி ஸமாதாநம் அநுக்ரஹித்திருக்கிறார். அதில் முக்யமான ஒரு விஷயத்தைப் பற்றி மாத்ரம் இப்பொழுது ப்ரஸ்தாவிக்கிறோம். மற்றை விஷயங்களிலுள்ள ஸம்ஶயங்களை மற்றொரு ஸமயத்தில் விண்ணப்பித்துக் கொள்ளலாமென்பது அடியேனுடைய அபிஸந்தி. ஸ்ரீ வீரராகவாசார்யர் சொல்லும் ஸமாதாநமாவது:—பிந்ந பிந்ந த்ரவ்யங்களுக்கும் உபாதாந உபாதேய பாவம் உண்டு என்பதே நமது ஸித்தாந்தம். ஆகையால், ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரர் கூறியிருப்பது, பூர்வாசார்யர்களுடைய நிர்வாஹத்திற்கு விருத்தமன்று. ஸ்ரீ பாஷ்யகாரர், ப்ரக்ருத்யதிகரண பாஷ்யத்தில் 'ப்ரஹ்மம் நிர்விகார வஸ்து வானாலும் சேதநா சேதநங்களாகிற தனது ஶரீரத்தின் வழியாக ப்ரஹ்மத்திற்கு விகாரவத்வம் ஸம்பவிக்கக் கூடும். எப்படி நிர்விகாரமாக இருக்கும் ஜீவாத்மாவுக்குப் பால்யம் யௌவநம் என்னும் அவஸ்தைகள் அஸம்பாவித மானாலும் அந்த ஜீவனுடைய ஶரீரத்தில் காணப்படும் பால்யம் முதலிய அவஸ்தா பேதங்களைக் கொண்டு, 'பாலனாக இருந்தவன் யுவாவாக ஆகிவிட்டான்' என்று வ்யவஹரித்து அதுவழியாக அவைகளுக்கு உபாதாந உபாதேய பாவத்தை நிர்வஹிக்கிறோமோ, அப்படியே ப்ரஹ்ம ப்ரபஞ்ச விஷயத்திலும்' என்று அநுக்ரஹித்திருக்கிறார். இம்மாதிரியே விலக்ஷணத்வாதிகரணத்திலும் 'ப்ரஹ்மத்தைக்காட்டிலும் ப்ரபஞ்சம் விஜாதீயமானதால் அதற்கு ப்ரஹ்மம் உபாதாந மாகமாட்டாது என்று ஶங்கை வர, விலக்ஷண வஸ்துக்களுக்கும் பரஸ்பரம் உபாதாந உபாதேயத்வம் ஸம்பவிக்கலாம்; ஸூக்ஷ்மாவஸ்தையை அடைந்திருக்கும் சேதநாசேதநங்களை ஶரீரமாக உடைத்தாயிருக்கும்பொழுது ப்ரஹ்மம் காரண வஸ்துவாகி

றது; ஸ்தூலாவஸ்தையில் இருக்கும் ப்ரபஞ்சத்தை ஶரீரமாக உடைத்தாயிருக்கும் பொழுது அது கார்ய மாகின்றது. இவ்வாறு ஶரீரத்தில் தென்படும் அவஸ்தா பேதத்தை அவலம்பித்து ஜகத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் கார்ய காரண பாவம் உபபந்நமாகு மன்றோ?' என்று அநுக்ரஹித்திருக்கிறார். இப்படி, பூர்வாசார்யர்களும் பிந்ந பிந்ந வஸ்துக்களுக்கு உபாதாநோபாதேயத்வத்தை அங்கீகரித்திருக்கிறபடியால் அவர்களுக்கும் ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரருக்கும் ஒருவித அபிப்ராய பேதம் இல்லை. இதுதான் ஸ்ரீ. உப. வீரராகவாசார்யருடைய முக்யமான ஸமாதாநம்.

இது விஷயமாக அடியேன் விண்ணப்பித்துக் கொள்வதாவது:— ஸ்ரீ பாஷ்யகாரரும் ஸ்ரீ தேஶிகனும் ப்ரஹ்மத்துக்கும் ப்ரபஞ்சத்துக்கும் உபாதாந உபாதேய பாவ முண்டென்று ஸித்தாந்தித் திருக்கிறார்கள் என்பது ஸத்யம். ஆனால், அவை இரண்டும் பிந்ந த்ரவ்யங்க ளென்றும், அப்படி பிந்நங்களாக இருந்தாலும் அவைகளுக்கு உபாதாந உபாதேய பாவமுண்டு என்றும் அவர்கள் நிர்வஹிக்கவில்லை. அவைகளுக்குப் பரஸ்பரமுள்ள ஶரீர ஶரீரி பாவத்தை முன்னிட்டு அவை இரண்டும் விஶிஷ்டாகாரேண ஏகத்ரவ்ய மென்பதை ஸ்தாபித்து, அதுவழியாக உபாதாந உபாதேய பாவத்தை அவர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். இப்படி த்ரவ்யைக்யத்தை அவலம்பித்து உபாதாந உபாதேய பாவத்தை ஸ்தாபித்திருப்பதைப் பிந்ந த்ரவ்யங்களுக்கு உபாதாந உபாதேய பாவத்தை ஸ்தாபிப்பதாக நாம் எப்படி சொல்லக்கூடும்? விஶிஷ்டாகாரத்தை த்யஜித்து விஶேஷண விஶேஷ்யங்களைத் தனித் தனியாக எடுத்துக்கொண்டு அவைகளுக்கு உபாதாந உபாதேய பாவமுண்டு என்று அவர்கள் நிர்வஹித்திருந்தாலன்றோ அவர்களுடைய நிர்வாஹம் ப்ரக்ருதத்துக்கு உபபந்ந மாகும்? அப்படி அவர்கள் செய்யாததால் அவர்களுடைய நிர்வாஹங்களைப்பற்றி ப்ரஸ்தாவிப்பது ஸங்கத மாகமாட்டா தென்பது அடியேனுடைய ஶங்கை. பூர்வாவஸ்தையிலுள்ள விஶேஷணாம்ஶத்துக்கு அதைக்காட்டிலும் பிந்நமான உத்தராவஸ்தையிலுள்ள விஶேஷ்யாம்ஶத்தை உபாதேயமாகவும், பூர்வாவஸ்தையிலுள்ள விஶேஷ்யாம்ஶத்திற்கு அதைக்காட்டிலும் பிந்நமான உத்தராவஸ்தையிலுள்ள விஶேஷணாம்ஶத்தை உபாதேயமாகவும் அவர்கள் ஸமர்த்தித் திருந்தால் அதை ப்ரக்ருதத்துக்கு ஸாதகமாக உதாஹரிக்லாமே யொழிய விஶிஷ்டவேஷேண உபாதாந உபாதேய பாவத்தை ஸமர்த்தித் திருப்பதை உதாஹரிப்பது ப்ரக்ருதத்தில் எப்படி அந்வயிக்கும்?

ஸ்ரீ வீரராகவாசார்ய ஸ்வாமி, இவைகளுள் இரண்டாவது கோடியை ப்ரஸ்தாவித்து விசாரித்திருக்கிறார். 'பூர்வாவஸ்தையி லுள்ள விஶேஷ்யாம்ஶ

மாகிற ப்ரஹ்மத்துக்கு உத்தராவஸ்தையி லுள்ள விசேஷணம்சமாகிற சேதநா சேதநங்கள் அடங்கிய ப்ரபஞ்சத்தைக் குறித்து உபாதாநத்வம் உண்டோ? அதை விசாரிப்பது முக்யம்' என்று வற்புறுத்தி விட்டு, அதற்கு அநேக ஆசார்யர்களுடைய வாக்யங்களையும் தடஸ்தரான நய மயூக மாலிகை யின் கர்த்தாவின் நிர்ணயத்தையும் உதாஹரித்திருக்கிறார். அது ப்ரக்ருதத் துக்கு ஸங்கதமே. ஆனால் அதை ஸாதிப்பதற்கு ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரர் கல்பித்திருக்கும் புதிய லக்ஷணம் அபேக்ஷித மில்லை. ப்ரஹ்மத்துக்கு ஸர்வ கார்ய கர்த்ருத்வத்தைச் சொல்லும் ச்ருதிகள் அதை ஸ்வதஸ் ஸித்தமாக ஸ்தா பிக்கின்றன. அவை பிந்ந த்ரவ்யங்களே. அவைகளுக்கு உபாதாந உபாதேய பாவத்தை ச்ருதிகளே, 'சூ௵கா நஂ ஔயஉகூ-ஈ-த' இத்யாதி வாக்யங்களாலே அவைகளுக்கு உபாதாந உபாதேய பாவத்தை ஸ்தாபித்திருக்கின்றன. ஆகை யால் அதைப்பற்றி விவாத மொன்று மில்லை. ஆனால் அது ஒன்றே ஸ்ரீ உப நிஷத் பாஷ்யகாரர் மதத்தை நிர்வஹிக்கப் பர்யாப்தமன்றோ என்று கேட்க லாம். 'ச்ருதி சொல்லிவிட்டது, அதைப் பற்றி நாம் சங்கிக்கக்கூடாது.' என்று முதலிலேயே சொல்லி யிருக்கலாமன்றோ! அதை விட்டுவிட்டு ஸ்ரீ உப நிஷத் பாஷ்யகாரர் ஒரு லக்ஷணாந்தரத்தைக் கல்பிக்க ப்ரயத்நப் படுவானேன் என்பதே அடியேனுடைய ஆக்ஷேபம்.

நிற்க: ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரர், அடியேன் கூறி யிருப்பவையுள் முதல் கோடியை யெடுத்துக்கொண்டு, அதில் தமது லக்ஷணத்தை அந்வயிக்க முயன்று, அது விததமாகப் போவதால் அவ்விடத்தில் ஒரு பரிஷ்காரத்தைச் செய்கிறா ரென்பதும் இவ்விடத்தில் கவனிக்கத் தக்கது. பூர்வாவஸ்தையி லுள்ள விசேஷணம்சமாகிற சேதநா சேதநங்கள் அடங்கிய ப்ரபஞ்சம் உத்தரா வஸ்தையிலுள்ள விசேஷ்யாம்சமாகிற ப்ரஹ்மத்துக்கு உபாதாந மாகுமோ வென்று கேட்டுக்கொண்டு, பரமாத்மாவைக் குறித்து அசேதநத்தை உபாதாந மாகச் சொல்வது அத்யந்த அஸங்கதமென்பதை உணர்ந்து, 'தஶஹிஷ' என்றொரு தளத்தை நிவேசித்துத் தமது லக்ஷணத்தைப் பரிஷ்கரிக்கிறார். இது துரவகாஹமானபரிஷ்காரம். பிந்ந த்ரவ்யங்களுக்கு லக்ஷண ஸமந்வயம் செய்யப் புகுகிறவர், தமக்கு அத்யந்தம் பாதகமான 'தஶஹிஷ' என்னும் தளத்தை அவலம்பிப்பது ஆச்சர்யமே. இவை யெல்லாவற்றையும் பார்க்கும் பொழுது ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரருடைய மதம் பூர்வாசார்யர்களுடைய மதத்தை அநுஸந்திக்கின்றது என்று எப்படி சொல்லக்கூடும்?

* * * *

நமது தேசத்தில் புதிது புதிதாகப் பலவித கிளர்ச்சிகள் உண்டாவதை நாம் பார்க்கிறோம். எவ்வித காரணமு மின்றிக்கே சிலர் வித்யாசாலைகளும் சில வஸ்துக்களை வெறுக்கிறார்கள். ஒரு பாபமும் அறியாத ஸம்ஸ்க்ருத பாடமும் சில ஜநங்கள் மீது சிலருக்கு நிஷ்காரணமாகவே த்வேஷ புத்தி ஜநிக்கின்றது.

“ 𑌮𑍃𑌗𑌮𑍀𑌨𑌸𑌜𑍍𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌤𑍃𑌣𑌜𑌲𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌵𑌿𑌹𑌿𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑍀𑌨𑌾𑌮𑍍 ।
𑌲𑍁𑌬𑍍𑌧𑌕𑌧𑍀𑌵𑌰𑌪𑌿𑌶𑍁𑌨𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌰𑌣𑌵𑍈𑌰𑌿𑌣𑍋 𑌜𑌗𑌤𑌿 ॥ ”

த்ருணத்தைப் புஜித்து ஜீவிக்கின்றது மான்; வேடன் அதைக் கண்ட மாத்ரத்தில் அடிக்கிறான். நீரில் ஜநித்து நீரில் வளர்ந்து வருகின்றது மீன்; அதற்கு ஜந்ம சத்ரு செம்படவன். உள்ளதைக் கொண்டு த்ருப்தி அடைகிறவர்கள் ஸாது ஜநங்கள்; அவர்களை நசுக்குகிறார்கள் துஷ்ட சித்தர்களான விஷமிகள். ஆகையால் இந்த ஜகத் ஸ்ருஷ்டியில் ஒருவன் மற்றொருவனை த்வேஷிக்கவோ நேசிக்கவோ காரண மொன்று இருத்தல் வேண்டு மென்னும் நியமமில்லை.

கொஞ்ச காலமாகச் சிலருக்கு நமது ஸம்ஸ்க்ருத பாஷையின் மீது அளவற்ற கோபம் ஜநித்திருக்கிறது. அந்தத் த்வேஷம் தாங்கமாட்டாமல் சிலர் ஸம்ஸ்க்ருத புஸ்தகங்களைத் தீக்கு இரையாக்கினர்; மற்றும் சிலர் ஸம்ஸ்க்ருதம் படிப்பவர்கள்மீது கோபம் கொண்டு அவர்களுக்குத் தம்மால் சக்ய மளவு தீங்கு செய்து வருகிறார்கள். இம்மாதிரி மௌட்ய ப்ரயுக்தமான வ்யாபாரங்கள் மூடர்களான சில ஜநங்களிடம் மாத்ரம் காணப்படு மென்று நாம் நினைத்திருந்தோம். இப்பொழுது அது காட்டுத் தீப் போல் எங்கும் பரவிவிட்டது.

நமது பாடசாலைகளில் பஹுகாலமாக மற்றைப் பாஷைகள் போல ஸம்ஸ்க்ருத பாஷையும் வித்யார்த்திகள் அப்யஸிக்க வேண்டிய பாடங்களுள் ஒரு பாடமாக ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது ஸம்ஸ்க்ருத பாடத்துக்கு ப்ராதாந்யத்தைக் குறைத்து அதை ஒரு அப்ரதாநமான பாடமாகவும், ஒவ்வொரு வாரத்திலும் ஸ்வல்ப காலமே அந்தப் பாடத்திற்குப் போதுமான காலமாகவும், இவைபோன்ற சிற்சில புதிய வ்யவஸ்தைகளை நமது பாடசாலா நிர்வாஹத்தைச் செய்துவரும் ராஜாங்கத்தார் செய்ய ஆரம்பிக்கிறார்க ளென்று நாம் கேள்விப்படுகிறோம். பாடசாலைகளில் ஸம்ஸ்க்ருத ப்ரசாரத்தைக் குறைக்க வேண்டு மென்பதே அவர்களுடைய கருத்தென்று ஊஹிக்க இட மிருக்கின்றது. ப்ரதி திநம் இரண்டு நாழிகைக்குக் குறையாமல் இது பர்யந்தம் பாடசாலைகளில் ஸம்ஸ்க்ருத பாடங்கள் நடந்து வந்தன. இப்பொழுது ஒரு வாரத்தில் இரண்டு நாள், திநம் ஒரு நாழிகை வீதம் போதுமாம். இஷ்ட முள்ளவர்கள் படிக்கலாமாம். எல்லாரும் படிக்க வேண்டுமென்னும் நிர்ப்பந்த

மில்லையாம். இவ்வாறு ஒரு பாஷையின் மீது த்வேஷம் பாராட்டிக் கொண்டு அதை ப்ரசாரமடைய வொட்டாமல் தடுப்பதைக் காட்டிலும் குற்றம் வேறென்றுண்டோ?

ஸம்ஸ்க்ருதம் வ்யவஹாரத்தில் இல்லை யென்று அதன் மீது தோஷ மொன்றை இவர்கள் ஆரோபிக்கிறார்கள். அது ஸாமாந்ய ஜநங்களால் வ்யவ ஹரிக்கப்படவில்லை யென்பது உண்மையே. பண்டிதர்கள் அநேகர் ஜல ப்ராய மாக அதில் வ்யவஹரிப்பதை நாம் அறிவோம். குணைக க்ராஹியான மாக்ஸ் முல்லர் (Maxmuller) என்னும் பாச்சாத்ய வித்வான் பின் வருமாறு இதைப் புகழ்ந்து பேசி யிருக்கிறார். "ஸம்ஸ்க்ருதம் வ்யவஹாரத்தில் இராமற் போனாலும், வ்யவஹாரத்திலுள்ள மற்றை இந்திய பாஷைக ளெல்லாம் ஸம்ஸ்க்ருதத்தி லிருந்தே தம் உயிரைப் பெற்றிருப்பது மின்றி, தமது அழகையும் பெருமை யையும் அதிலிருந்தே அடைந்து ஶோபிக்கின்றன." ["All the living languages of India draw their very life and soul from Sanskrit."] என்கிறார். வில்ஸன் (Wilson) என்னும் மற்றொரு வித்வான், "ஸம்ஸ்க்ருத ஜ்ஞாநம் இல்லாவிட்டால் பெங்காலி ஹிந்துஸ்தாநி முதலிய பாஷைகளில் தெளி வாகவும் சுத்தமாகவும் அழகாகவும் வ்யவஹரிக்க யோக்யதை எவனுக்கும் வரமாட்டாது." ["No man who is ignorant of Sanskrit can write Hindustani or Bengali with elegance, purity and precision."] என்கிறார். இப்பொழுது 'மாஸ்கோ' என்னும் பட்டணத்திலுள்ள ஒரு ருஷியர் மஹாபாரதத்தையும் ராமாயணத்தையும் ரஷ்ய பாஷையில் மொழி பெயர்ப்புச் செய்திருக்கிறாராம். அமெரிக்காக் கண்டத்தில் பாடஶாலைகள் எல்லாவற்றிலும் ஸம்ஸ்க்ருத பாடத்திற்கு ப்ராதாந்யம் கொடுத்து வருகிறார்களாம். இப்படி ஜகத் முழுவதும் ஸம்ஸ்க்ருத பாஷையின் சிறப்பைப் பற்றிக் கொண்டாடுகையில், நாம் அதை அநாதரிக்கிறோமென்றால் அது அறியாமை யென்று சொல்வதைத் தவிர்த்து வேறு யாது சொல்லக்கூடும்?

“ 𑌶𑌰𑌣𑌮𑍁𑌪𑌗𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑍋𑌽𑌯𑌮𑌾𑌦𑍇𑌶𑌕𑌾𑌰𑍀
𑌶𑌮𑌯𑌤𑌿 𑌪𑌰𑌿𑌤𑌾𑌪𑌂 𑌸𑌮𑍍𑌮𑍁𑌖𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑍍𑌤𑍋𑌃 ।
𑌶𑌤𑌗𑍁𑌣𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌸𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂
𑌵𑌰𑌵𑌿𑌤𑌰𑌣𑌭𑍂𑌮𑌾 𑌵𑌾𑌰𑌣𑌾𑌦𑍍𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 ॥ 8.

𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌭𑌾𑌗𑍍𑌯𑌂 𑌕𑌮𑌲𑌨𑌿𑌲𑌯𑌾𑌚𑍇𑌤𑌸𑍋 𑌭𑍋𑌗𑍍𑌯𑌭𑍂𑌮𑌿𑌃
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌧𑌿𑌰𑌵𑌿𑌕𑌲𑌃 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑌾𑌶𑌿𑌃 ।

---

8. இந்த ச்லோகத்தில், ஸ்ரீ ஹஸ்திகிரி நாதனாகிற வரதனுடைய வரப்ரதாந மாஹாத்ம்யமானது யதோக்தகாரியின் ஸாமீப்யத்தால் ஆயிரம் மடங்காக வளர்ந்து நிற்கின்றது என்று சொல்லப்படுகின்றது. இரண்டு எம்பெருமான்களுடைய ஸ்வரூபம் ஒன்றன்றோ? திவ்ய மங்கள விக்ரஹங்கள் மாத்ரம் பேதித்திருக்கின்றன. அப்படியிருக்க, ‘ஒருவருடைய பல ப்ரதத்வம் மற்றொருவருடைய ஸாந்நித்யத்தால் மஹிமை பெறுகின்றது என்று சொல்வது எப்படி உபபந்நமாகும்?’ என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். இரண்டு திருநாமங்களும் ஒன்றே என்பதில் ஆக்ஷேப மில்லை. ‘𑌸𑌾𑌕𑌂 𑌵𑍇𑌗𑌵𑌤𑍀 𑌜𑌯𑍇𑌤𑍍’ என்று இது முதல் ச்லோகத்திலே விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ‘𑌉𑌪𑌾𑌯𑌫𑌲𑌭𑌾𑌵𑍇𑌨’ என்று ஒருவருக்கு உபாயமாக இருக்கும் தன்மையும் மற்றொருவருக்குப் பலமாக இருக்கும் தன்மையும் அவ்விடத்திலேயே ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு திவ்யாவதாரங்கள் இரண்டாக இருக்கின்றன என்பதை அவலம்பித்து அவர்களை வேறுபட்டவர்கள் போலப் பேசுகிறார். வெஃகாநாதன் ப்ரஹ்மாவால் ஶரணாகதி பண்ணப்பட்டவனாய்க் கொண்டு உபாயாந்தர ஸ்தாநத்தில் நின்று யாக விக்நத்தை நிவர்த்தித்தான். அவனே பிந்தி ஹஸ்தி கிரியில் ஆவிர்ப்பூதனாய் வரதன் என்னும் திருநாமத்தையுடைய பகவத் ஸந்தர்ஶநமாகிற பரம பலத்தை அளித்தான். இப்படி யதோக்தகாரியின் அவதாரம் பகவத் ஸந்தர்ஶநத்திற்கு ஹேதுவாக இருப்பதே இவ்விடத்திற் செய்யப்பட்டுள்ள உல்லேகத்திற்கு நிபந்தநம். வரதனை இதனாலேயே விட்டு யதோக்தகாரியை ஶரணாகதி செய்கிறாரென்று சொல்லலாம். வரதனுக்குள்ள வர ப்ரதாந மஹிமை யதோக்தகாரியின் ஸாமீப்யத்தால் வளர்கின்றது என்பது ஒரு சாடுக்தி.

[ப—ரை] 𑌶𑌰𑌣𑌮𑍁𑌪𑌗𑌤𑌾𑌨𑌾𑌂—ஶரணாகதியைப் பண்ணியிருக்குமவர்களுக்கெல்லாம் [அப்படிப்பட்ட ஸகல ப்ராணி வர்க்கத்திற்கும்], 𑌆𑌦𑍇𑌶𑌕𑌾𑌰𑍀—[அவர்கள் இடும்] கட்டளைகளைச் செய்கிறவனாயிருக்கும், 𑌸𑍋𑌽𑌯𑌂—அந்த யதோக்தகாரீ, 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑍍𑌤𑍋𑌃—ஸகல ப்ராணிகளுக்கும் [ப்ரபந்நர்கள் எல்லாருக்கும்], 𑌸𑌮𑍍𑌮𑍁𑌖𑌸𑍍𑌸𑌨𑍍— அபிமுகனாக இருந்து கொண்டு, 𑌪𑌰𑌿𑌤𑌾𑌪𑌂—தாபம் எல்லாவற்றையும், 𑌶𑌮𑌯𑌤𑌿—நிவர்த்திப்பிக்கிறான். 𑌯𑌸𑍍𑌯—எந்த யதோக்தகாரியின், 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌—ஸாந்நித்யத்தில், 𑌵𑌾𑌰𑌣𑌾𑌦𑍍𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯—ஹஸ்திகிரி நாதனாகிற வரதனுடைய, 𑌵𑌰𑌵𑌿𑌤𑌰𑌣𑌭𑍂𑌮𑌾—வரங்கொடுக்கும் அதிஶயமானது, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂—ப்ரதி திநம், 𑌶𑌤𑌗𑍁𑌣𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌃—நூறு மடங்கு அதிகமான முடிவையுடையதாக, [𑌭𑌵𑌤𑌿—ஆகிறதோ].

9. இந்த ச்லோகத்தில் தாம் செய்த ஶரணாகதிக்குப் பகவான் இணங்கி, தம்முடைய ஹ்ருதயத்தில் ப்ரஸந்நனாகிவிட்டதாகப் பாவித்து, ‘ஜயதி’ என்று மங்களாஶாஸநம் செய்கிறார்.

வ-ணா நாஊ: வரிண திரஸஸ ஹஷ்ஷய ல்நா ஙிஶய்யாம்
வெஶாவெ த-ஜஂய தி விவ-யொ விஶ்வஸ்ஸெக்ஷகஹெ த-: ॥ 9.

[ப—வை] காஂசீஹா ஶ்ரீ—காஞ்சீ நகருக்கு ஒரு பாக்யமாகவும், கஊயு நியாஜெ தவொ ஜிஷவிஃ:—பெரிய பிராட்டியாருடைய ஹ்ருதயத்திற்கு ஒரு ஸித்தியாகவும், கயுாணா நாஊவிகயொ நியி:—ஸகல மங்களங்களுக்கும் குறை வற்ற நிதியாகவும், கொஉவி காரு-ணூாஶி:—அநிர்வசநீயமான கருணாநிதியாக வும், ந: வ-ணூா நாஂ வரிணதி:—நாம் செய்துள்ள புண்யங்களுடைய பக்வ மான பலமாகவும், விஶ்வஸ்ஸெக்ஷகஹெ த-:—ஸகல ஜகத்தின் ரக்ஷணத்திற்கு ஒரே காரணமாகவு மிருக்கிற, ஸஸஸ விவ-யொ வெஶாவஶாவெ த-:—வேகா நதிக்கு விஸ்தீர்ணமான அணையாகிற இந்த யதோக்தகாரீ, ஹொஶிஶய்யாம் ஹஷ்ஷயநு—திருவநந்தாழ்வானுகிற தனது திருப்பள்ளி மெத்தையை அலங்கரித் துக்கொண்டு, ஜயதி—விளங்குகிருர்.

இந்த வர்ணநத்தைப் பார்த்தால், திருமேனியின் அழகை அவ்வளவாக வர்ணி யாமல், கல்யாண குணங்களிலேயே ஈடுபட்டு ஸ்தோத்ரம் செய்வதாகத் தோன்றலாம். அப்படித் தோன்றின போதிலும், ‘ஸஸஸ’ என்று ப்ரயோகம் செய்திருப்பது, அந்தப் பகவான் அப்பொழுது ஸ்ரீஸ்வாமிக்கு ஸாக்ஷாத்தாக ஸேவை ஸாதித்ததாகவே சொல்ல வேண்டும் ஏன் திருமேனியின் அழகையும் திவ்யாயுத பூஷணுதிகளையும் வர்ணிக்கவில்லை யென்ருல், சில ஸமயங்களில் பக்தர்களைத் தமது குணங்களால் ஆகர்ஷிப்பதும், மற்றும் சில ஸமயங்களில் தமது திருமேனியின் அழகால் ஆகர்ஷிப்பதும் பகவானுடைய விசித்ர மான சேஷ்டிதங்கள்'. ஆதலால் இவ்விடத்தில் ஸ்ரீ தேஶிகனுடைய திருவுள்ளம் அவ னது கல்யாண குணங்களில் ஓடிவிட்டது போலும்.

காஂசீஹா ஶ்ரீ—வரதனுடைய திருவவதாரத்திற்கு யதோக்தகாரி ஹேது. யதோக்தகாரீ உபாயம், வரதன் பல மென்று முதல் ச்லோகத்திலேயே அநுக்ரஹித்திருக் கிருர். ப்ரஹ்மாவின் யாகத்தை யதோக்தகாரியாயிருந்து நிறைவேற்றினதா லன்ருே, காஞ்சீ நகரத்தில் வரதனுடைய ஆவிர்ப்பாவம் ஏற்பட்டது. ஆகையால் காஞ்சீ நகரத் தின் பாக்யம் யதோக்தகாரியே. அன்றிக்கே: ரமணீயங்களான கணக்கற்ற ஸ்தலங்க ளிருக்க, காஞ்சிக்கு அவன் எழுந்தருளி அணைபோல ஸ்திர ஶயநத்தை அவ்விடத்திலே திருவுள்ளம் பற்றினு னென்பது காஞ்சீ நகரத்தினுடையவும் அதில் வஸிக்கும் ஜநங்களு டையவும் பாக்யமே· அன்றிக்கே, காஞ்சீ நகருக்கு இவனுடைய ஸாந்நித்யம் ஒரு ஶோபா விஶேஷத்தைக் கொடுக்கிற தென்றும் சொல்லலாம். ‘ஸ-ஹஶ்ரீத்ரு க-ஶிடாஸஸ’ என்பதுபோல.

கஊயு..........ஷிஃ:—காஞ்சியின் பாக்யமென்று அநுக்ரஹித்தவுடன், இவன் பெரிய பிராட்டியாரின் பாக்ய ஸித்தியன்ருே என்பது ஸ்ம்ருதிக்கு வந்தது. பெரிய பிராட்டிக்குப் பாக்ய மென்று சொல்வதற்குக் காரண மென்னவென்ருல், தீநர்களான க்ருஷிகளுக்கு மோக்ஷம் எப்படி யென்று பிராட்டி சிந்தித்திருக்க, அகிஞ்சநர்களான ப்ரபந்நர்களின் விஷயத்தில் தாமே உபாயாந்தர ஸ்தாநத்திலிருந்து அவர்களை யெல்லாம் கரையேற்றுகிருே மென்று யதோக்தகாரியாக அவதரித்ததாலே, பிராட்டியின் சிந்தை நிவ்ருத்தியடைந்த தன்ருே? என்றும் சிலர் சொல்வார்கள். சிந்தா க்ரஸ்தர்களின் சிந்தை விலகி அவர்களின் மநோரதம் நிறைவேறுவதே பெரியதொரு ஸித்தி.

𑌵𑍇𑌗𑌾𑌸𑍇𑌤𑍋𑌰𑌿𑌦𑌂 𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌂 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑍇𑌨 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌮𑍍 ।
𑌯𑍇 𑌪𑌠𑌨𑍍𑌤𑌿 𑌜𑌨𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌹𑌰𑌿𑌃 ॥ 10

𑌇𑌤𑌿 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌿𑌷𑍁 𑌵𑍇𑌗𑌾𑌸𑍇𑌤𑍁𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍍.

𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌾𑌯 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌶𑌾𑌲𑌿𑌨𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 ॥

𑌅𑌕𑌲𑌙𑍍𑌕𑌃—என்பதற்கு, 'குறைவற்ற' என்பது பொருள்.

𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑌾𑌶𑌿𑌃—ப்ரஹ்மாவின் யாகம் ப்ரதிபத்த மாகும்போல் இருந்த பொழுது, பகவான் அவருக்குத் தனது அளவற்ற கருணையைக் காண்பித்தா னென்பது ப்ரஸ்துத மாகையால், அந்தக் காருண்யத்தை நினைத்து இவ்விடத்தில் '𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑌾𑌶𑌿𑌃' என்று பேசப்படுகிறது.

𑌨𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌿𑌣𑌤𑌿𑌃—வரதனை அவதரித்ததை நினைத்து, 'நம்முடைய பாக்ய மன்றோ இது!' என்று ஸாதிக்கிறார். நமது கண்களுக்கு அளவற்ற ஆநந்தத்தைக் கொடுக்கின்ற அவனுடைய ஸேவை கிடைப்ப தென்பது பெரியதொரு பாக்யமே.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑌕𑍍𑌷𑍈𑌕𑌹𑍇𑌤𑍁𑌃—ஜகத் முழுவதையும் ரக்ஷிப்பதற்கு அவனே ஶக்தன். '𑌵𑌿𑌶𑍍𑌵𑌭𑍋𑌗𑍈𑌕𑌹𑍇𑌤𑍁𑌃' என்று ஒரு பாடாந்தரம் உண்டு. அப்பொழுது 'ஸகல ஜநங்களுடைய போகத்திற்கும் அவனே முக்ய காரணம்' என்பது பொருள்.

𑌭𑍋𑌗𑌿𑌶𑌯𑍍𑌯𑌾𑌂 𑌭𑌜𑌨𑍍𑌤𑍁—பகவான் ஶேஷ ஶயநத்தில் எழுந்தருளியிருப்பது, அந்த ஶயநத்திற்கே ஒரு விஶேஷித்த அலங்காரத்தைச் செய்கிறது. அப்படியே தமது சேதஸ்ஸிலும் ஸேவை ஸாதிப்பதாகத் தெரிகிறது. இவ்விடத்தில் எம்பெருமான் பிராட்டியின் பாக்ய ஸித்தி யென்றும், மற்றோரிடத்தில் பிராட்டி எம்பெருமானுடைய திவ்ய ஸம்பத் தென்றும் [𑌸𑌂𑌪𑌦𑍀𑌵𑍍𑌯𑌾 𑌉𑌭𑌯𑌵𑌿𑌜𑌯𑌿𑌨𑌃] சொல்வது நமது ஸித்தாந்தத்தை வெளியிடுகின்றது. ஸகல கல்யாண குணங்களும் இரண்டு திருநாமங்களுக்குமுண்டென்பதும், சிற்சில குணங்கள் ஒவ்வொருவரிடத்தில் பலோபதாயமாக இராமலிருப்பதே வாசியென்பதும் நமது ஸித்தாந்த மன்றோ?

10. ஆரம்பித்த ஸ்தோத்ரத்தைத் தமது திருநாமத்தை நிர்த்தேஶித்து நிகமநம் செய்கிறார். இந்த ஸ்தோத்ரத்தை ஜபிக்கிறவர்களுக்கு ஸ்ரீ ஶரண்யன் சொன்ன வண்ணம் செய்வன் என்பது இந்த ஸ்தோத்ரத்தை ஜபிப்பதன் பலம்.

[ப—ரை.] 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑍇𑌨—வேங்கடேசன் என்னும் திருநாமமுடைய ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகனால், 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌮𑍍—ரசனை செய்யப்பட்ட, 𑌇𑌦𑌮𑍍—இந்த, 𑌵𑍇𑌗𑌾𑌸𑍇𑌤𑍋𑌃 𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌮𑍍—யதோக்தகாரியின் ஸ்தோத்ரத்தை, 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃—எந்த ஜநங்கள், 𑌪𑌠𑌨𑍍𑌤𑌿—படிக்கிறார்களோ, 𑌤𑍇𑌷𑌾𑌮𑍍—அவர்களுக்கு. 𑌹𑌰𑌿𑌃—அந்தப் பகவான், 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇—சொன்னவண்ணம் செய்கிறான்.

പഠന്തി—'படிக்கிறார்களோ' என்று ஸாமாந்யமாகச் சொல்லப்பட்டிருந்தபோதிலும், 'ப்ரதி தினம் எவர்கள் அநுஸந்திக்கிறார்களோ' என்பதும் விவக்ஷிதம்.

യഥോക്തം കുരുതേ—ശரணாகதர்கள் என்ன செய்யச் சொல்லுகிறார்களோ அதை அவன் செய்கிறான் அவர்கள் சொல்லவேண்டு மென்பது கூட இல்லை; அவர்கள் எதை மநஸ்ஸால் ஸங்கல்பிக்கிறார்களோ, அதை நிறைவேற்றி விடுகிறான் என்பதும் தாத்பர்யம். 'യഥോക്തം'—'சொன்னவண்ணம்' என்று மாத்ரம் சொல்லப்படிருக்கிறது. 'இன்னார் சொல்லும் ப்ரகாரம்' என்று சொல்லவில்லை. ஆகையால், 'தான் சொல்லி யிருக்கும் வண்ணமே' என்றும் பொருள் கொள்ளலாம். அவன் சொல்லியிருப்பது என்னவென்றால், 'സര്വപാപേഭ്യോ മോക്ഷയിഷ്യാമി' [ஸகல பாபங்களிலிருந்தும் விடுவித்துவிடுகிறேன்] என்பதுதான். இது அவன் ப்ரதிஜ்ஞை அன்றோ? அந்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றி மோக்ஷ பர்யந்த ஐச்வர்யத்தைக் கொடுத்து நம்மை க்ருதார்த்தர்களாகச் செய்வன் என்பது தாத்பர்ய மென்றும் சொல்லலாம். 'യഥോക്തകാരീ യഥോക്തം കരോതി—பக்தர்கள் சொல்லும் வண்ணம் ஸகலத்தையும் செய்யும் ஸ்வபாவ முள்ள அவன், தான் சொன்னவண்ணமும் நடப்பன் என்பது அந்வயம்

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்ட

ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ர

வ்யாக்யாநம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவின் '47 நவம்பர் மாஸத்துச் சந்தா வரவு

			ரூ.
80	ஸ்ரீ S. வெங்கடரங்க ஐயங்கார், கங்கவல்லி	....	3
136	,, D. சேஷையங்கார், பெண்டபாடு	...	3
140	,, S. பெருமாள் ரெட்டியார், ஆலந்தூர்	...	3
141	,, K. K. ஸ்ரீநிவாஸன், மதுரை	...	3
194	,, A. S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், திருக்கோவலூர்	...	3
203	,, ஸர். S. வரதாசார்யர், மயிலாப்பூர், சென்னை	...	3
297	,, R. ஸாரநாத ஐயங்கார், வ்ருத்தாசலம்	...	3
356	,, K. கோபாலையங்கார், தேரழுந்தூர்	...	6
407	,, S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கரூர்	...	5
410	,, S. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீரங்கம்	....	3
458	,, T. K. க்ருஷ்ணமாசார்யர், திருக்கள்ளம்	...	7
559	,, M. V. ரங்கஸ்வாமி ஐயங்கார், கும்பகோணம்	...	5
673	,, V. ஸ்ரீநிவாஸாசார்யர், லாடபுரம்	...	3
698	,, ராவ்சாஹிப் V. C. துரைஸாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்	....	3
739	,, G. நரஸிம்ஹ ஐயங்கார், ஜாம்ஷெட்பூர்	...	3
793	,, V. C. க்ருஷணஸ்வாமி ஐயங்கார், கநகஸ்ரீநகர், கதீட்ரல் போஸ்ட், சென்னை	....	3
	ஸ்ரீமதி. ரங்கநாயகி அம்மாள், அன்னூத்தூர்	....	3
		மொத்தம் ரூ.	62

பிழைதிருத்தம்.—சென்ற ஸஞ்சிகையில், அக்டோபர் மாஸத்துச்சந்தா வரவுப் பட்டியலில், 165-ஸ்ரீ P. S. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம் ரூ. 3" என்றிருப்பது இழை. "165-வாத்யார் ஸ்ரீ R. ஸ்ரீனிவாஸையங்கார், ஸ்ரீரங்கம் ரூ. 3" என்பது திருத்தம்

ஸம்பாதகர்.

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ	மற்றவர்கட்கு. ரூ. அ.
1. ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12	1—0
3. உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0-12
4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	... 1—0	1—8
5. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	... 0—8	0-12
6. ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8. ஈஸாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevachariar, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.

294	ஸ்ரீ	I. ஸ்ரீநிவாஸாசாரியர், சைதாப்பேட்டை	...	1 0
361	,,	K. ஸ்ரீநிவாஸராகவ ஐயங்கார், உடையார்	...	2 0
374	,,	V. ரங்கஸாமி, ஈரோட்	...	5 0
388	,,	வேதாந்தாசாரியர், கல்கத்தா	...	3 0
414	,,	K. D. ராஜகோபால ஐயங்கார், விழுப்புரம்	...	3 0
426	,,	S. கணேஷ், பம்பாய்	...	2 0
443	,,	P. N. சேஷய்யங்கார், ஸ்ரீரங்கம்	...	2 0
451	,,	K. R. ஸ்ரீநிவாஸையங்கார், திருச்சி	...	2 0
454	,,	நரஸிம்ஹாசாரியர், மதராஸ்	...	3 0
464	,,	A. வெங்கடாசார்யர், கர்க்கி	...	3 0
475	,,	சே. ஸ்ரீநிவாஸராகவாசர்ர்யர்,, தூசி	...	2 0
483	,,	V. ராமஸ்வாமி ஐயங்கார், புகலூர்	...	3 0
533	,,	K. ஸ்ரீநிவாஸன், கல்கத்தா	...	3 0
539	,,	S. ஸம்பத்நாராயணன், மதராஸ்	...	2 0
560	,,	R. S. ஐயங்கார், கல்கத்தா	...	3 0
561	,,	K. ஜகந்நாத அய்யங்கார், கல்கத்தா	...	3 0
562	,,	A. நரஸிம்ஹாசார்யர், கல்கத்தா	...	3 0
585	,,	K. S. சேஷையங்கார், காட்டாம்பட்டி	...	5 0
622	,,	K. ஸ்ரீநிவாஸ கோபாலன்	...	3 0
644	ஸ்ரீமதி.	உ. ச. ராஜம்மாள் , அவளூர்	...	1 0
648	,,	வேதவல்லி அம்மாள், குடவாசல்	...	3 0
656	ஸ்ரீ	K. ஆராவமுதன், கல்கத்தா	...	3 0
657	,,	S. N. ரங்கஸ்வாமி ஐயங்கார், கல்கத்தா	...	3 0
658	,,	M. R. சாரி; கல்கத்தா	...	3 0
659	,,	A. ரங்காசாரியர், கல்கத்தா	...	3 0
660	,,	V. ராஜகோபால், கல்கத்தா	...	3 0
661	,,	I. சேஷையங்கார், கல்கத்தா	...	3 0
676	,,	K. S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்டுட்வர்ட்பேட்டை		2 0
690	,,	அலமேலு-ஜகந்நாதன், சைதாப்பேட்டை	...	3 0
691	,,	S. க்ருஷ்ணையங்கார், கல்கத்தா	...	3 0
692	,,	T. S. குப்புஸாமி ,,	...	3 0
693	,,	N. ஸ்ரீநிவாஸன் ,,	...	3 0
694	,,	S. V. ராகவன் ,,	...	3 0
695	,,	N. நாராயணையங்கார் ,,	...	3 0
698	,,	ராவ்ஸாஹிப் V. G. துரைசாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்		3 0
699	,,	P. T. ஸ்ரீநிவாஸாசரியர், மயிலாப்பூர்	...	3 0
700	,,	K. V, க்ருஷ்ணமாசாரி, திருவல்லிக்கேணி	...	3 0
701	,,	K. க்ருஷ்ணஸாமி ஐயங்கார், மயிலாப்பூர்	...	3 0
702	,,	K. S. ராகவாசார்யர், மதுரை	...	2 0
705	,,	V. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர், பெங்களூர்	...	3 0
706	,,	S. ஸ்ரீநிவாஸன், கல்கத்தா	...	3 0

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை.	மற்றவர்கட்கு ரூ. அ. பை.
1. ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யானத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12—0	1—0—0
3. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0–12—0
4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
5. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0–12—0
6. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
7. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
8. ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் :—

"மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**
கெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை."

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.